THIRU R. PONNAPPA NADAR : The word 'Organisation Congress' may be there. We fought the election on that and won. With due deference I say that we may be called as Congress (O). That would be in the fitness of things.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I agree if we are called as Indian National Congress as stated by the Chief Minister. The Hon. Speaker said I am creating some dispute. That is not correct. We are under Indian National Congress and what we said was that we may be called as 'Tamil Nadu Legislature Congress'. You can call us Indian National Congress and you can call them as Congress (O). The whole problem is solved.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை முதலிலேயே சொல்லியிருந்தால் விவகாரமே முடிந்து போயிருக்கும். திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தலைமையில் இருக்கும் காங்கிரசை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்னதைப்போல் காங்கிரஸ்—ஓ என்றும் ஸ்தாபன காங்கிரஸ் என்றும் மற்றது தேசிய காங்கிரஸ் என்றும் இந்த மன்றத்தைப் பொறுத்தவரை அழைக்கப்படுவதாக நீங்கள் ஒத்துக்கொண்டிருப்பதாக நான் அறிவிக்கிறேன்.

6. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீதும் விவாதம் தொடரும். இன்று இரண்டாம் நாள். திரு. தங்கமணி அவர்கள் தமது பேச்சைத் தொடர்வார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மிஸ்டர் ஸ்பீக்கர் சார், நேற்றைய தினம் விவசாயப் போராட்டம் சம்பந்தமான சில சம்பவங்களைப்பற்றி நான் குறிப்பிட்டேன். இன்றைக்கு நான்கைந்து அம்சங்களை மட்டும், எப்படி அரசு தவறு செய்தது என்பதை வலியுறுத்தலாம் என்று நினைக்கிறேன். 5-ம் தேதி பந்த், சுமார் 29-ந் தேதி போராட்டக்குழுவினுடைய முடிவு செய்யப்பட்டது அரசுக்குத் தெரியும். அதற்குப் பிறகு அரசு இந்த பந்தை நடத்த விடக்கூடாது என்ற நோக்கத்தோடு கலெக்டர்கள் மாநாடும், 2 ஆம் தேதியன்று ஆளுங்கட்சி எல்லாயிடங்களிலும் கூட்டங்களை நடத்த வேண்டுமென்ற முறையிலே ஏற்பாடு செய்தார்கள். இந்த நேரத்தில் பார்வர்ட் பிளாக் கட்சியின் தலைவர் திரு. மூக்கையா தேவர் அவர்கள் எடுத்த முயற்சி நல்ல முயற்சிதான். அவர் தங்க

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஞடைய அறைக்கு இரண்டு கட்சியினரையும் அழைத்திருந்தால் அது தல்ல முறையிலே இருந்திருக்கும். அதற்கு மாறுக அவர் மூலமாக முதலமைச்சரவர் கள் சொல்லிவிட்டார்களோ என்னவோ தெரியவில்லை. அதை மேலும் சிக்க லாக்கிவிட்டது.

5-ம் தேதி அன்று நடந்த சம்பவங்களைப் பற்றி அரசு கொடுத்திருக்கக்கூடிய குறிப்பின் அடிப்படையிலே சில விவரங்களை நான் சொல்லலாம் என்று நினைக் கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் மூக்கையா தேவர் அவர்களோடு ஒரு தனி இடத்தில் பேசியது போல, எங்களையும், விவசாயச் சங்கத்தைச் சேர்ந்த வர்களையும் அழைத்துப் பேசியிருப்பார்களேயானால், அவர்களும் வந்திருப்பார் கள். ஆனால் இல்லை. . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : விவசாயிகளின் பிரதிநிதிகள் கோட்டையில் வந்து என்னுடன் பேச விரும்பவில்லை என்று தங்கள் பேச்சின் மூலமாகப் புரிந்து கொள்ளவேண்டியிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : நேரிடையாக முதல் அமைச்சர் அவர்கள் அழைத்திருக்கலாம். அப்படி அழைப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை என்று தில் ஏற்பட்டுவிட்டது. ஏற்கெனவே அழைத்து வந்தார்களே, அப்பொழுது பார்க்க மறுத்து விட்டார்கள். இரண்டு கட்சிப் பிரச்னையாகிவிட்டது. அதற்குப் பிறகு மூன்றாவது ஒருவரை விட்டு அழைக்காமல், அவரே அழைத்திருந்தால் கண்டிப்பாக வந்திருப்பார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வந்தார்கள், பார்க்க மறுத்தேன் என்பதற்கு என்ன ஆதாரம், என்ன சான்று காட்டுகிறீர்கள்?

திரு. கே. டி. கே. தங்கமணி : எனக்குப் பின்னால் பேசக்கூடியவர்கள் இந்த விவரங்களை சொல்வார்கள். நான் கேட்டுச் சொன்னால் அது ஹியர் சேயாக இருக்கும். நேரில் சம்பந்தப்பட்டவர்களே அதைப்பற்றி சொல்வார்கள். அவர் கள் சொல்வது உண்மையா, முதல் அமைச்சர் அவர்கள் சொல்வது உண்மையா என்று சபை முடிவு செய்யட்டும். மக்கள் முடிவு செய்து கொள்ளட்டும்.

5-ம் தேதி பந்தை நடத்த விடக்கூடாது என்பதற்காகத் திட்டம் போடப் பட்டு 2-ம் தேதி கூட்டங்களில் என்ன பேசப்பட்டது என்பது அரசுக்குத் தெரியும். இங்கு வந்திருக்கக்கூடிய உறுப்பினர்களுக்கும் தெரியும். 5-ம் தேதி நடந்த சம்பவங்களை ஒட்டி துப்பாக்கிப் பிரயோகங்கள் பற்றி அவர்களே ஒத்துக்கொண்ட விவரத்தைத் தான் சொல்கிறேன். பெத்தநாயக்கன்பாளையத் தில் 9 பேர்கள், ஐயம்பாளையத்தில் 2 பேர்கள், கோவில்பட்டியில் ஒருவர்,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 10

காத்தூரில் ஒருவர், மானுமதுரையில் ஒருவர், விருதுநகருக்கு அருகே ஒருவர் ஆகியோர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தினால் கொல்லப்பட்டவர். இதைத் தவிர போலீஸ் லத்தி சார்ஜினால் இறந்தவர்கள் இருவர். அரசாங்கத் தினுடைய கணக்குப்படி வரக்கூடிய விவரம் 15, 16 பேர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தினால் செத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அரசாங்கத்தின் கணக்குப்படி என்று சொன்னீர்கள். வேறு உங்களுடைய கணக்குப்படி ஏதாவது இருந்தால், வேறு ஏதாவது பெயர்கள் வைத்திருந்தால், அந்த விவரத்தையும் சொன்னால், அவர் களுக்கும் நிதி தருவதற்குத் தயாராக இருக்கிறேன். நீங்கள் கொடுத்த மனுவின் அடிப்படையில் பேசப்பட்ட அளவிலே, பேசப்பட்டதையொட்டி பெயர் கொடுக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 5,000 நிதி கொடுக் கப்பட்டது. உங்களுடைய கணக்குப்படி வேறு யார் யார் இறந்தார்கள் என்று சொன்னால் அவர்களுக்கும் நிதி வழங்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதற்கான விவரங்களைக் கொடுப்பதற்குத் தயார். விவரங்கள் இருக்கின்றன. விளாத்திக்குளத்தில் சம்பவத்தையொட்டி படுகொலை செய்யப்பட்டவர் ஒருவர். துப்பாக்கிப் பிரயோகத்தில் அடிபட்டு பின்னால் இறந்தவர் ஒருவர். விவரங்களைக் கொடுக்கத் தயார். ஆனால், துப்பாக்கி பிரயோகம் நடந்த முறை எப்படி? அது அவசியம் தானா? அப்படி அவசியம் இல்லை என்று சொன்னால் அரசு எடுத்த நடவடிக்கை சரிதானா? என்னுடைய பாயிண்டு அதுதான். நான் டிடையில்ஸ்க்குள் போக விரும்பவில்லை. அரசுக்குக் கிடைத்திருக்கக்கூடிய விவரங்களைப் போல கிட்டத்தட்ட நானும் விவரங்கள் வைத்திருக்கிறேன். அந்த இடங்களுக்கு நானும் சென்று வந்துள்ளேன். இறந்தவர்களின் வீடுகளில் போய்ப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன். நான் மட்டும் தனியாகப் போய்வரவில்லை. என்னோடு பல சட்ட மன்ற உறுப்பினர்கள் வந்தார்கள். உறுப்பினர்கள் திரு. கரேந்திரன், திரு. ஜெயராம ரெட்டியார், திரு. சுப்பு ஆகியோர் வந்திருந்தார்கள், அதே மாதிரி தான் திரு. மோகன் குமாரமங்கலமும் வந்திருந்தார். . திரு. காமராஜ் சென்ற இடங்களை நானும் பார்த்திருக்கிறேன். நான் நேரடியாகப் பார்த்தத்தான் சொல்கிறேன். விஷயம் என்னவென்றால், துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது நியாயம்தானா என்பதைப் பற்றி நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துப்பாக்கிப் பிரயோகத்தால் இறந் தவர்கள் குறித்து இப்பொழுது கணக்குக் கொடுத்தீர்கள். அரசு கொடுத் திருக்கும் கணக்கிற்கும், அதற்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா? இரண் டும் ஒத்து வருகிறதா?

1972 ஆகஸ்ட் 10]

திரு. கே. டி. கே. தங்கமணி : அந்தக் கேள்விக்கு நான் நேரடியாகப் பதில் சொல்ல விரும்பவில்லை. நான் பேசக்கூடிய முறையில்தான் நான் பேச வேண்டும். இப்படித்தான் நான் பேச வேண்டும் என்று என்னை யாரும் கட்டாயப்படுத்துவதற்கு அதிகாரம் இல்லை. இதில் விஷயம் என்னவென்றால் நாம் பார்க்கிப் பிரயோகம் செய்தது நியாயம் தானா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கேட்கவில்லை. நான் ஆர்வத்தோடு கேட்கிறேன். ஆவலோடு கேட்கிறேன். அரசுத் தரப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கைவிட உங்கள் கைக்கில் அதிகமான விவரங்கள் கிடைத்திருக்கிறதா? கவலையோடு கேட்கிறேன். அப்படி ஏதாவது இருந்தால், பெயரைச் சொன்னால் அவர்களுக்கும் நிதி வழங்குவதற்குத் தயாராக இருக்கிறேன். இரண்டு கணக்கும் ஒத்து வருகிறதா? அல்லது உங்கள் கணக்குப்படி அதிகமாக வருகிறதா?

திரு. கே. டி. கே. தங்கமணி : அது வெளியே வேறு மாதிரிப் பேசிக் கொள்ளக்கூடிய விஷயம். நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப் பட்டிருக்கிறது. சுட்டது அவசியம்தானா என்பது தான் பிரச்சினை. சுட்டதில் 9 பேர் இறந்தார்களா அல்லது 10 பேர்கள் இறந்தார்களா என்பது அல்ல. சுட்டது தப்பு என்பது தான் பிரச்சினை. சுட்டது தப்பு என்றால், ஒருவரைச் சுட்டார்களா அல்லது மூன்று பேர்களைச் சுட்டார்களா என்பதைப் பற்றி வாதம் செய்வதில் பயனில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அரசாங்கம், பல பேர்கள் செத்திருக்கும்பொழுது, இவ்வளவு பேர்கள்தான் செத்தார்கள் என்று தவறாகத் தகவல் கொடுத்தால் அது தவறு—அரசாங்கம் மோசடியில் ஈடுபடுகிறது, அரசாங்கம் உண்மையை மறைக்கப் பார்க்கிறது என்று நினைக்க இடம் ஏற்படும். ஆகவே தான் தயவு செய்து கேட்கிறேன், அரசாங்கத்தினுடைய கணக்கும், உங்கள் கணக்கும் ஒத்து வருகிறதா, இல்லையா என்று சொல்ல வேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பெத்துநாயக்கன்பாளையத்தில் முதலில் நான்கு பேர்கள் என்று சொன்னது அரசு. அதற்குப் பின்னால் அது 7 பேர்கள் ஆனது. அதற்குப் பின்னாலே 9 பேர்கள். முதலில் போலீஸ் ஸ்டேஷன் தாக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அதனால்தான் துப்பாக்கிப் பிரயோகம் என்று அரசு அறிக்கை வந்தது. அந்த ஊரில் போலீஸ் ஸ்டேஷனே இல்லை. அதைப் பின்னாலே அரசே அறிந்துகொண்டது. இதெல்லாம் நடந்த விஷயங்கள். இப்பொழுது நீங்கள் கொடுத்திருக்கின்ற விவரங்களை ஏற்றுக்கொண்டு பேசுகிறேன். 9 பேர்கள் இறந்துவிட்டார்கள் என்று அறிவித்திருக்கிறீர்களே, அந்த 9 பேர்களும் பெத்தநாயக்கன் பாளையத்தில் சாகவேண்டியது அவசியம்தானா. அந்தக்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 10

காரியங்கள் நடந்தது நியாயம் தானே? பெத்துநாயக்கன்பாளையம் ஒரு சிறு கிராமம். அதிலே போலீஸ் ஸ்டேஷன் கிடையாது. அவுட் ஸ்டேஷன் கூட கிடையாது. போலீஸ் ஸ்டேஷன் இருக்கிறது என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னால் கூட, அங்கே போலீஸ் ஸ்டேஷன் வந்துவிட முடியாது. அப்பேர்ப் பட்ட ஒரு இடத்தில் நடந்த சம்பவம் இருக்கிறதே, அது எப்படி நடந்தது. கண்மூடித்தனமாக சுடப்பட்டது அங்கே என்பதற்கு ஒன்றிரண்டு உதாரணங்கள் சொல்கிறேன். அவர்கள் அங்கே பெரிய ஆயுதங்களோடு வந்து விடவில்லை விவசாயிகள் தங்களுடைய மாட்டு வண்டிகளோடு வந்துவிடவில்லை. விவசாயிகள் தங்களுடைய மாட்டு வண்டிகளோடுதான் வந்தார்கள். மாட்டு வண்டிகளுடைய சக்கரங்களை எடுத்துக்கொண்டு போவதற்கு முயற்சி செய்ய, பிறகு பேச்சு வார்த்தை நடக்க, பேச்சு வார்த்தை நடந்து போலீஸ்காரர்கள் லாரியில் ஏறிக்கொண்டு போகக்கூடிய நிலைமைதான். போலீஸ் லாரியில் போகும்பொழுது சுட்டுக்கொண்டே போயிருக்கிறார்கள். உள்ளேயிருந்து சுட்டதால் யாரைச் சுடுகிறோம் என்பது கூடத் தெரியாமல் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அப்படி அவர்கள் சுட்டதால் ஒரு எருமை மாடு இறந்தது. பக்கத்தில் ஒரு ஹோட்டலுக்கு உள்ளேயிருந்த இரு பெண்மணிகள் காய மடைந்தார்கள். சுட்ட முறை எப்படி? லாரியிலிருந்துகொண்டு சுடுகிறார்கள். ஆகவே, மேல்நோக்கித்தான் சுட முடியும். பாதிக்கப்பட்டவர்கள் அத்தனை பேர்களுக்கும் நெஞ்சுக்கு மேல் தான் காயம். போலீஸ் கோடின்படி காலுக்குக் கீழே தான் சுட வேண்டும். பல உறுப்பினர்கள் இதைப்பற்றி ஏற்கனவே பேசியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் பேசியிருக்கிறார்கள்

'only when it is a question of shoot to kill, shooting will be above the chest.'

15, 20, பேர்களில் ஒருவர் இருவருக்குத்தான் காலில் காயம் மற்றவர்களுக்கு எல்லாம் 'எபவ் தி செஸ்ட்' தான் காயம். படுகொலை செய்யவேண்டுமென்று திட்டமிட்ட முறையிலே படுகொலை நடந்திருக்கிறது. ஆகவே தான் எங்கள் கட்சியின் சார்பாகச் சென்ற மதிப்பிற்குரிய தலைவர் டாக்டர் அகமத் அவர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்த காட்கில் அவர்களும் அவர்களுக்குப் பின்னால் சென்ற மோகன் குமாரமங்கலம் அவர்களும், அவர்களுக்குப் பின்னால் சென்ற திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் இது ஒரு ஜாலியன்வாலா பாக் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இடத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

'Venmani tragedy was a black spot for the first D.M.K. Ministry and Peddanaickenpalayam is another black spot for the second D.M.K. Ministry'.

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

என்று குற்றம் சாட்டுகிறேன். பெத்து நாயக்கன்பாளையத்தில் நடந்தது நியாயம் தான் என்று மக்களுக்கு நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையது. எப்படி நிரூபிக்கவேண்டும் என்பதைப் பற்றி பின்னால் சொல்கிறேன். இன்றைக்கு நிரூபிப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை. ஏதாவது ஒரு காரணம் சொல்லி, அதற்குரிய விசாரணையை நடத்த வில்லை. இறந்தவர்கள் 19 வயது, 20 வயது, 25 வயது இப்படித்தான் இறந்திருக்கிறார்கள். பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் இறந்திருக்கிறார்கள். அரிஜனங்களாக இருக்கலாம், படையாச்சியாக இருக்கலாம், நாயக்கராக இருக்கலாம். பல ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் அவர்கள். ஒரே துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தார்கள் என்ற முறையில் 7 பேர்களும் ஒருவர் பக்கத்தில் ஒருவர் வைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜாதி உணர்ச்சியைத் தூண்டுகிறேன் என்று யாரும் சொல்ல வேண்டாம். அதைத் தூண்டிவிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் அது நேராதவாறு ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுவேன்.

எனக்கு இந்த நேரத்தில் 1946-ஆம் ஆண்டில் நடைபெற்ற ஒரு சம்பவம் தான் நினைவிற்கு வருகிறது. அப்போது மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் சம்பந்தமாக நடைபெற்ற சம்பவங்களில் கோவை சின்னியம் பாளையத்தில் நான்கு தொழிலாளர்களுக்குத் தூக்குத் தண்டனை வழங்கப் பட்டது. நாளைக்குத் தூக்கிலிடப் போகின்றார்கள் என்றால் இன்று நாங்கள் போய் அவர்களைப் பார்க்கிறோம். அவர்கள் சொன்னார்கள், 'நாங்கள் நால்வரும் ஒரே இயக்கத்தினைச் சேர்ந்தவர்கள், எனவே தூக்கிலிட்ட பிறகு எங்கள் பிணங்களை ஒரே குழியில் போட்டு புதைக்க வேண்டும்', என்று கேட்டுக்கொண்டார்கள். அதுபோன்றே அவர்கள் அடக்கம் செய்யப்பட்டார்கள் என்பதை இந்தச் சட்டமன்றத்தின் முன்னால் பெருமையுடன் சொல்லிக்கொள்ளுவேன். அது போன்றே இப்போது ஐயம்பாளையத்தில் நடந்தது. இது பல்லடத்தினருகில் பாதைக்குச் சற்று தள்ளியுள்ள ஒரு சிறு கிராமம். அங்கே எந்த விதமான ஹர்த்தால் நடைபெற்று இருக்கமுடியும்? அங்கே ஒரு பஸ்சை நிறுத்தியிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக டிரான்ஸ்போர்ட் அமைச்சர் அவர்களும் இதைக் கவனத்தில் கொள்ளுவது நல்லது. அந்த பஸ் எம். டி. ஸி. 9989. அது பொள்ளாட்சி—திருப்பூருக்குப் போய்க்கொண்டிருக்க வேண்டிய பஸ் அது இங்கே எப்படி வந்தது என்பது விசாரிக்கப்பட வேண்டிய ஒன்று. அந்த வண்டியிலிருந்து பெட்ரோலை எடுத்து மாட்டு வண்டிகளுக்குத் தீ வைத்தார்கள். அது போன்று போலீஸ் வண்டியிலிருந்தும் பெட்ரோலை எடுத்துத் தீ வைத்தார்கள். எனவே, மக்களுக்கு ஆத்திரம் ஏற்பட்டது.

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பஸ்லில் பெட்ரோல் இல்லே. டீஸல் தான் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: எனக்குக் கிடைத்த விவரம் அப்படி. இதில் டீஸல் என்றால் போலீஸ் வண்டியிலிருந்து பெட்ரோலே எடுத்திருக்கலாம். அது சிறிய விஷயம். நான் கேட்பது, அந்த பஸ் அங்கே போயிருக்க வேண்டிய அவசியம் என்ன? அந்த பஸ்ஸை அங்கே தடுத்து நிறுத்துகின்றார்கள். உடனே போலீஸ் வருகிறது. வந்து பெண்களையெல்லாம் அவமானப்படுத்து கிறார்கள். தலைமயிரைப் பிடித்து இழுத்து அவர்களே வண்டியில் போடுகின் றார்கள். மக்கள் ஆத்திரப்படுகிறார்கள். போலீசை ஏசிப் பேசுகிறார்கள். அங்கே இரண்டு பேர் சுட்டுக்கொல்லப்படுகிறார்கள். அதில் ஒருவர் மாணவர். பல்லடம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லுகிறார்கள். அதை ஊர்வலமாக எடுத்துச் செல்ல வேண்டும் என்று மக்கள் அந்த பிரேதத்தைக் கேட்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள், 'நாங்கள் உடனே அதற்கு அனுமதி வழங்கினேம்' என்று. ஆனால் அன்றைக்கு அனுமதிக்காமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று தெரியாது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: என்ன ஆகியிருக்கும் என்று சொல் லுங்களேன்?

திரு. கே. டி. கே. தங்கமணி: சற்றுப்பொறுங்கள். அவசரப்படாதீர்கள். ஆனால் சாத்தூரில் படுகொலை செய்யப்பட்ட அந்தப் பிரேதத்தை ஏன் கொடுக்கவில்லே? இதற்கு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்லப் போகி றார்கள்? அங்கே நெஞ்சில் குறிவைத்துச் சுட்டார்களே. இறந்த அந்த சீனிவாசன் ஒரு தொழிலாளி. அவனுடைய தாயாரும் மூன்று சகோதரர் களும் 'பிரேதம் வேண்டும்' என்று கேட்டார்கள். ஆனால் அதைக் கொடுக்க மறுத்து உடனடியாக போலீஸ் அதை எடுத்துக்கொண்டு போய்க் கொளுத்தி, சாம்பலே அல்லவா தாயாரிடம் கொடுத்தார்கள்? இது நியாயம் தானு? இது பாவம் இல்லேயா? ஒரு தாய் தன் பிள்ளேயின் பிரேதத்தையாவது பார்க்க வேண்டும் என்றுகேட்கிறாள். ஆனால் அதைக் கொடுக்க மறுத்து, ஒரு பிடி சாம்பலேக் கொண்டுபோய் கொடுத்து · இதோ உங்கள் பிள்ளேயின் சாம்பல் என்று கொடுத்தால் அந்தத் தாய்க்கு எப்படியிருக்கும்?

இது போலவேதான் விருதுநகருக்குப் பக்கத்தில் நம்மாழ்வார் என்ற 19 வயது பையனேக் கொன்றார்கள். அவனுடைய பிரேதத்தையாவது கொடுத் தார்களா என்றால் இல்லே. அங்கேயும் அவனே போலீசே எரித்துவிட்டு,

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி., கே. தங்கமணி]

பிடிசாம்பலியே கொண்டுவந்து கொடுத்த காட்சியினைப் பார்த்தோம். ஒரு பக்கத்தில் ஒன்பது பேர் படுகொலை. இன்னொரு பக்கத்தில் பிணங்களை எரித்து விட்டு சாம்பலைக் கொடுக்கும் காட்சி.

அன்றைக்குப் பல்லடத்தில் மட்டும் பிணத்தைக் கொடுக்காமல் இருந்திருந்தால் அங்கே 500 பிரேதங்கள் விழுந்திருக்கும். அங்கே உள்ள நிலைமையைப் புரிந்துகொண்டு நீங்கள் சாமர்த்தியமாக சமாளித்தீர்கள் என்பதைத் தவிர நல்லெண்ணத்துடன் அதைக் கொடுத்தீர்கள் என்றால் அதை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். எப்படி 15 ஆயிரம் மாட்டு வண்டிகள் கோவையில் வந்தவுடன் சமாளித்தீர்களோ—அது என்னுடைய குற்றச்சாட்டு—ஒரு சிக்கலான நிலைமை வந்தால் அந்த நேரத்தில் அதிலிருந்து விடுபட இறுதியான முடிவெடுக்காமல் அந்த நேரத்திற்கு ஏதோ ஒன்றைச் செய்வதால் அந்தத் தீமை மீண்டும் மீண்டும் ஏற்படுகிறது என்பதை நான் குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

சாத்தூரில் ஒரு பையன் பேரிலே குறிவைத்துச் சுட்டிருக்கின்றார்கள். 'போஸ்ட்மார்ட்டம்' செய்யும்போது கழுத்தில், நெஞ்சில்தான் காயம் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். அதுபோல விருதுநகரில் நம்மாழ்வாரையும் நெஞ்சில் குறிவைத்துத்தான் சுட்டிருக்கின்றார்கள்.

கோவில்பட்டியில் நடந்தது விசித்திரமான சம்பவம். அங்கே அர்த்தால் நடைபெறுகிறது. ஒரு கடை மூடப்படவில்லை. கலைமணி என்ற பெயருள்ள அந்தக் கடை, ஓட்டல், மூடப்படவில்லை. அதுவும் மூடப்படவேண்டும் என்று மக்கள் கோருகிறார்கள். ஆனால் கலைமணி ஓட்டலின் உள்ளேயிருந்து கைக்குண்டுகள் வெளியே அவர்கள் பேரிலே எரியப்பட்டன. உள்ளிருந்து ரிவால்வரால் சுடப்பட்டது. அதில் கந்தசாமி என்று ஒருவர் இறந்தார். அந்தக் கந்தசாமி போலீஸ் துப்பாக்கிச் சூட்டினால் இறந்தாரா அல்லது கலைமணி ஓட்டலிலிருந்து எரியப்பட்ட கைக்குண்டால் அல்லது சுடப்பட்ட கைத் துப்பாக்கி குண்டால் இறந்தாரா என்று ஆராயப் படவேண்டும். இதை விசாரிக்க வேண்டும் என்று நான் தாழ்மையோடு கேட்டுக்கொள்ளுகிறேன். என் என்றால் இப்படி லீசென்ஸ் இல்லாத துப்பாக்கி அல்லது வெடி குண்டுகள் அங்கே எப்படி வந்தன என்பதை ஆராய வேண்டும்.

அடுத்து, மாணமதுரையில் அமைதியான முறையில் கடையை அடைத்திருக்கின்றார்கள். ஆனால் ஒரு கடையில் மட்டும் ஆட்கள் உள்ளே இருந்துகொண்டு கடையை மூடவே மாட்டோம் என்று மறுக்கிறார்கள்.

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அது பொதுவான ஒருவருடைய கடையா அல்லது கட்சிக்காரருடைய கடையா?

திரு. கே. டி. கே. தங்கமணி: அது உங்கள் கட்சிச் செயலாளருடைய கடை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: கட்சிச் செயலாளருடைய கடை என்ரூல் அதை மூடுவார்கள் என்று எதிர்பார்க்க முடியுமா?

திரு. கே. டி. கே. தங்கமணி: திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் களுடைய ஆதரவு இந்த இயக்கத்திற்கு இல்லீ என்று எண்ணுகின்றீர்களா? பல கிராமங்களிலே திராவிட் முன்னேற்றக் கழகத் தோழர்கள் இந்த இயக்கத் திற்கு ஆதரவாக இருந்ததையும் பார்த்தோம். பயந்துகொண்டு சிலர் மூடி யிருக்கலாம். ஆனல் பலரும் தங்களுடைய அரசு தவறு இழைக்கிறது என்று கருதி மூடியிருக்கின்ரூர்கள். அது விவாதத்திற்குரியது. அவர் மூட மறுத் தார், மாணமதுரையில். மூடியிருந்தால் விவகாரத்திற்கே இடமில்லீ. இறந்தவர் மாணமதுரைத் தோழர். நான் அவர் வீட்டிற்கே சென்று விசாரித்தேன். மறுக்க முயற்சிக்க வேண்டாம். அங்கே சாத்தையா என்று ஒரு பையன் 19 வயதிருக்கும். அவனுக்குக் காலில் அடி. மருத்துவ மனைக்கு அவனை எடுத்துச் சென்று மூன்று நாட்கள் சிகிச்சை அளித்து திருப்பியனுப்பிவிட்டார்கள். இன்னும் சிறிது காலம் சிகிச்சை அளித்திருக்க வேண்டும். இல்லீயென்ரூல் காலீ எடுத்தவிட வேண்டிய நிலீ ஏற்படக் கூடும்.

ஆக, துப்பாக்கியால் சுடப்பட்ட இடங்களிலே ஒரு இடத்திலாவது மூதலில் கண்ணீர்புகைக் குண்டுகளை உபயோகித்தார்களா என்ரூல் இல்லீ.

அடுத்து அருப்புக்கோட்டையில் அர்த்தால். அங்கே ஊர் பெரியவர் கிருஷ்ணசாமி ரெட்டியார் சொல்லுகிரூர், ஊர் கட்டுப்பாடாக இருக்கிறது, இங்கே ஒரு விதமான தகராறும் வேண்டாம் என்று. அவரைப்போய் போலீஸ் லட்டியால் அடித்துக் கொன்ரூர்கள். இப்படி போலீஸ் அடக்குமுறை யானலும் சரி, அதையொட்டி சம்பவங்களானலும் சரி, தேவைக்கு அதிகமான முறையில் போலீஸார் வரம்பிற்கு மீறிய அதிகாரத்தையும் துப்பாக்கிகளையும் உபயோகித்தார்கள், பல அக்கிரமங்கள் நடந்திருக்கின்றன என்று நான் குற்றம் சாட்டுகிறேன்.

விளாத்திக்குளத்தில் துப்பாக்கிப் பிரயோகம் எதுவும் இல்லாமல் பெருமாள் சாமி என்பவர் வெட்டியே கொலீ செய்யப்பட்டிருக்கிரூர். அதையும் விசாரணை செய்ய வேண்டும்.

1972 ஆகஸ்ட் 10]

திரு. மு. இரத்தினசபாபதி: சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். திரு. தங்கமணி அவர்கள் கூறுவதுபோல் விளாத்திக்குளத்தில் அந்த மாதிரியான சம்பவம் எதுவும் நடைபெறவில்லை. அது தவறான தகவல் என்பதை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: போலீஸ் ரிப்போர்ட் வரட்டும். வந்தபின் பார்க்கலாம்.

மாண்புமிகு போலவைத் தலைவர்: அவர் விளாத்திக்குளம் எம்.எல்.ஏ. அந்த மாதிரி சம்பவம் எதுவும் கிடையாது என்று அவரே சொல்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: எனக்கு கிடைத்த விபரத்தை வைத்து நான் சொல்கிறேன். போலீஸ் ரிப்போர்ட்டில் அந்த விபரம் இருக்கலாம். போலீஸ் ரிப்போர்ட் வந்தபின் உண்மை தெரியும். இறந்தவர்களுடைய பட்டியலைக் கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். அதனால் எனக்குக் கிடைத்த விபரங்களை இங்கே தெரிவித்திருக்கிறேன்.

சிறையிலே இருந்து நாங்கள் வெளியே வந்த பின்னால் எங்களுக்கு ஒரு பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. சோழவந்தானில் உள்ள பெரியவர் ஒருவர்—கருப்பையா பிள்ளை—எங்களை வரவேற்றுப் பேசும்போது "ஜெயிலிலிருந்து நீங்கள் உயிரோடு வந்திருக்கிறீர்களே, அதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்" என்று சொன்னார். அதனால் ஜெயில் அதிகாரிகளை நாங்கள் குறை சொல்ல வில்லை. அவர்கள் நல்லமுறையில் நடந்துகொண்டார்கள். 3,000 பேர் இருக்க வேண்டிய இடத்தில் 8,000 பேரை அடைத்து வைத்தார்கள். அதனால் ஏற்பட்ட சுகாதாரக் கேடு சொல்ல முடியாது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சில இடங்களில் கொடிய நோய்கள் வந்திருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் அம்மாதிரி யான கொடிய நோயோ காலராவோ வரவில்லை. அதனால் இங்கும் நோய்கள் வரவேண்டுமென்று நான் சொல்லவில்லை.

மதுரை சிறைச்சாலையில் குடிக்க தண்ணீர் கிடையாது. குளிப்பதற்கு இடம் கிடையாது; தண்ணீர் கிடையாது. அங்கே மலஜலம் கழிப்பதற்கு வசதி கிடையாது. மலஜலம் கழிக்கும் இடங்களில் புழுக்கள் நெளிந்ததை நாங்கள் உணவு அருந்தும்போது கூட பார்த்துக்கொண்டிருக்கவேண்டிய சங்கடமான நிலை இருந்தது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: நானும் சட்ட அமைச்சரும் மதுரை சிறைச்சாலையைப் பார்த்திருக்கிறோம். 3,000 பேர் அங்கே இருந்திருக்கிறோம். ஆகையால் எங்களுக்கும் சிறைச்சாலை அனுபவம் உண்டு; நன்றாகத் தெரியும்.

[1972 ஆகஸ்ட் 10

திரு. கே. டி. கே. தங்கமணி: 1946-ல் ஒரு வருஷம், பின் 3 மாதம், அதன் பிறகு 3 மாதம், அதற்குப் பின்னால் ஒரு 6 மாதம், அப்புறம் ஒரு மாதம் இப்படி தான் பலமுறை சிறையிலிருந்திருக்கிறேன். ஆகவே, மதுரை சிறைச்சாலையைப் பொறுத்தவரையில் அமைச்சர்களைவிட எனக்கு அதிக அனுபவம் இருக்கும்.

கடைசியாக ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். நான் மதுரைச் சிறையில் இருந்தேன். வேலூரிலிருந்து பெரியகருப்பன் என்பவர் திருச்சி சிறைச்சாலைக்கு அனுப்பப்பட்டார். அனுப்பிய இரண்டாவது நாளில் அவர் இறந்துவிட்டார். அவருக்கு 'காஸ்டிரிக் ட்ரபிள்' இருந்தது. போதுமான சாப்பாடு சாப்பிட வேண்டும். ஜெயிலில் மற்றவர்கள் சாப்பிடாமல் இருக்கிறார்களே, நாமும் சாப்பிடாமல் இருக்கலாம் என்று நினைத்து சாப்பிட மறுத்தார். அதனால் அவர் இறந்திருக்கிறார். கோவையில் கிருஷ்ணசாமி நாயுடு இறந்திருக்கிறார். இப்படி இரண்டு பேர் கதை முடிந்துவிட்டது. அதோடு நின்றுவிட்டது சர்க்காருக்கு நல்லதாகப் போய்விட்டது. இன்னும் பலர் சிறையில் செத்திருந்தால் சிறையிலே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கும். அரசாங்கத்திற்கு அதனாலும் கெட்ட பெயர் வந்திருக்கும்.

சிறைச்சாலை ஹெல்த் விஷயத்தை நல்ல முறையில் கவனிக்க வேண்டும் சிறையில் மேலும் சுகாதாரக் கேடுகள் ஏற்படாமல் இருந்ததற்கு—உயிர்ச் சேதங்கள் ஏற்படாமல் இருந்ததற்கு நாங்கள் நடந்துகொண்ட முறை பாராட்டத் தக்கது. நான் தற்பெருமைக்காக இதைச் சொல்லவில்லை. ஜெயில் அதிகாரிகளைவிட நாங்கள் இந்த விஷயத்தில் துரிதமாகச் செயல்பட்டோம். ஒருவருக்கு ஏதாவது வயிற்றுப்போக்கோ மற்ற அசௌகரியங்களோ ஏற்பட்டால் நாங்கள் உடனே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தோம். இரவு இரண்டு மணிக்கு ஏதாவது சம்பவங்கள் நடந்தாலும் உடனே தக்க முறையில் கண்காணித்து வந்தோம்.

நடைபெற்ற விவசாயிகள் போராட்டத்தில் போலீஸார் வேண்டுமென்றே பலரைச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது போலீசாருக்கு, 'ஷூட் டு கில்' என்று சொல்லிக்கொடுத்திருக்கிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது. 'ஷூட் டு கில்' என்ற முறையில்தான் இத்தனை பேரை சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடங்களில் ஒரு நீதிபதியைக் கொண்டு விசாரணை நடத்தினால் இந்த விபரம் தெரியவரும். நீதி விசாரணை வேண்டும் என்று சொன்னவுடனே நீங்கள் சொல்வீர்கள், 'உங்கள் போராட்டக் குழுதானே வேண்டாமென்று சொன்னது' என்று. அது எனக்குத் தெரியும்.

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை என்னவென்றால், வெளி மாநிலத்திலிருந்து வருகிற 'பிளிட்ஸ்' பத்திரிகையில் உங்கள் எண்ணத்திற்கு மாறுபட்ட கருத்துக்கள் வந்தால் உடனே அந்த பத்திரிகை மீது கேஸ் போடுகிறீர்கள். அவர்கள் தமிழகத்தில் இருக்கிற கோர்ட் கூடாது என்று சொல்லி, வேறு கோர்ட்டுக்கு—சுப்ரீம் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். இங்கே இருக்கிற அலை ஓசை பத்திரிகை மீது வழக்குப் போடுகிறீர்கள். அவர்கள் இங்குள்ள கோர்ட் வேண்டாம் என்று சொல்லி வேறு கோர்ட்டுக்குப் போகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை இன்று நீங்கள் உருவாக்கியிருக்கிறீர்கள். அதனால்தான் விவசாயப் போராட்டக் குழுவும் தமிழ்நாட்டிலுள்ள ஜட்ஜுகள் வேண்டாம் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: போராட்டக் குழுவில் எந்த மாநில நீதிபதிகளும் வேண்டாமென்று முடிவு செய்திருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: முதலிலே 4 டிஸ்டிரிக்ட் ஜட்ஜுகளை நீதி விசாரணை நடத்துவதற்காக நீங்கள் நியமித்தபோது, 'இந்த நீதிபதிகள் வேண்டாம், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளைப் போடுங்கள்' என்று அவர்கள் சொன்னார்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் நமது மாநிலத்திலுள்ள நீதிபதிகளின் கௌரவத்தை பாதிக்கின்ற வகையிலே பேசுகிறார்கள். நீதிபதிகள் மீது நம்பிக்கை இல்லை என்று பேசுவது அவர்களை அவமானப்படுத்துவதாகும். ஆகவே அப்படிப் பேசுவது முறையல்ல என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஜட்ஜுகள் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனால் அவர்கள் நேர்மையான முறையில் நடந்துகொள்ள முடியாத அளவுக்கு இன்றைக்கு நிலைமையை உருவாக்கியிருக்கிறீர்களே என்பதற்காகத் தான் வெளி மாநில ஜட்ஜுகள் வேண்டுமென்று கேட்கிறார்கள்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் தமிழ்நாட்டிலே உள்ள நீதிபதிகள் தமிழக அரசுக்கு சார்புடையவராக இருப்பவர்கள் என்பதற்காகத்தான் வெளி மாநில நீதிபதிகள் வேண்டும், என்பதாகச் சொன்னார்கள். சில பத்திரிகைகள் அதனால்தான் வெளி மாநில நீதிமன்றங்களுக்குச் செல்கின்றன என்றும் சொன்னார்கள். அதேமாதிரி வெளி மாநில நீதிபதிகள் அவர்களுக்கு சாதகமாக நடந்துகொள்ளச் செய்து விடலாம் என்னும் நோக்கத்தில் தான் வெளி மாநில நீதிபதிகளைக் கேட்கிறார்கள் என்று தமிழ் மக்கள் எண்ணுவதற்கும் இடம் உண்டு அல்லவா?

திரு. கே. டி. கே. தங்கமணி: அப்படி இருக்கலாம். இந்த விஷயத்தில் அதற்குமேல் நான் செல்ல விரும்பவில்லே. நீதிவிசாரணை வேண்டுமா வேண்டாமா என்பதுதான் கேள்வி. சிதை தவறு செய்துவிட்டாள் என்று ஒருவர் சொல்கிறார். அவள் தவறு செய்யவில்லே என்பதை நிரூபிப்பதற்காக ஒரு பரீட்சை வைக்கப்பட்டது. அதேமாதிரி நீங்கள் நீதிவிசாரணை வைத்து, நீங்கள் குற்றமற்றவர்கள், தவறு செய்யாதவர்கள் என்று காட்டிவிடுங்கள். அண்ணு பாணியிலே சொல்லவேண்டுமானுல், நீதிவிசாரணை வைத்து உங்களேப் புனிதமானவர்களாக ஆக்கிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) முதுகளத்தூர் கலவரம் நடந்தபோது அண்ணு அப்படிச் சொன்னுர்கள். ஆனுல் நீங்கள் நீதிவிசாரணை இல்லே என்று சொல்கிறீர்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி: அப்போது அண்ணு அவர்களும், கல்யாணசுந்தரம், சசிவர்ணத்தேவர், மூக்கையாத்தேவர் ஆகியோரும் நீதிவிசாரணை வேண்டுமென்று கேட்டும்கூட, முடியாது என்று சொல்லி விட்டார்கள். எடுத்ததற்கெல்லாம் நீதிவிசாரணை வைத்தால் பிறகு போலீசார் கலவரம் நடக்கும் இடத்திற்கே போகமாட்டார்கள் என்று அந்நாள் நிதியமைச்சர் இந்நாள் இந்திய தொழிலமைச்சராய் இருக்கின்ற சி. சுப்பிரமணியம் அவர்கள் காமராஜருக்குப் பதிலாக இந்த மன்றத்தில் முழங்கினர்கள். அதை ஒருவரும் மறந்துவிடவில்லே. ஆனுல் இப்போது நாங்கள் நீதிவிசாரணை வைத்தும், நீதிவிசாரணை வேண்டாம், எங்களே விட்டுவிட்டால் போதும் என்று சொல்லிவிட்டார்கள். அதனுல்தான் நீதிவிசாரணை கைவிடப்பட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இந்த துப்பாக்கிப் பிரயோகம் . . .

DR. H. V. HANDE: Sir, on a point of order. I think the Hon. Chief Minister is entitled to give a correct version of what had happened in the meeting.

There are about 3,000 persons on whom all sorts of cases have been foisted. I mentioned how innocent persons have been booked under Railway Act. . . . .

MR. SPEAKER: What is the point of order?

DR. H. V. HANDE: The Chief Minister said that it was not possible to release them and that if at all he had to release them, we must waive the right of judicial enquiry. I think the Hon. Chief Minister is entitled to tell us what exactly happened.

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் இன்னும் சொல்கிறேன். வழக்குகள் இருக்கிற நிலைமையில் வழக்குகளே வாபஸ் பெறுவது என்றால் நீதி விசாரணை நடத்துவது இயலாது போய்விடும் என்று தெரிவித்தேன். அப்படியானால் நீதி விசாரணை வேண்டாம் என்று திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் தான் சொன்னார்கள். நான் பெருமையோடு சொல்லிக்கொள்வேன். அதைக் கடைசிவரை ஆட்சேபித்தவர் திரு. ஹாண்டே அவர்கள்தான். அவர்கள் கட்சியைச் சேர்ந்த ஆட்கள் சிறையில் அதிகம் இல்லை. பிறகு திரு. கல்யாணசுந்தரம் அவர்கள் திரு. ஹாண்டே அவர்களுடன் கிட்டத்தட்ட பத்து நிமிஷம் பேசி, இதற்குச் சம்மதிக்க வைத்தார்கள்.

DR. H. V. HANDE : It is wrong. Number of persons from our party went to jail from every district. I think the Hon. Chief Minister has no right to give an untruth, incorrect statement to the House.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்களுடைய ஆட்கள் இல்லவே இல்லை என்று சொல்லவில்லை. அதிகம் இல்லை என்றுதான் சொன்னேன். இன்னும்கூட ஸ்தாபன காங்கிரசைச் சேர்ந்த திரு. இராமச்சந்திரன் அவர்கள் அவர்களது கட்சியைச் சேர்ந்தவர்கள் 19 ஆயிரம் பேர் இருந்ததாகத் தெரிவித்திருக்கிறார்கள். மொத்தம் சிறையில் இருந்ததே இருபதாயிரம்.

திரு. கே. டி.. கே. தங்கமணி : 25 ஆயிரம் பேர் சிறையில் இருந்தார்கள்.

DR. H. V. HANDE : Majority was from Congress (O). I agree.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பத்தொன்பதாயிரம் பேர் ஸ்தாபன காங்கிரஸ்—பிறகு கம்யூனிஸ்ட் கட்சி, பிறகு விவசாயச் சங்கம், பிறகு சுதந்திராக் கட்சிக்காரர்கள்—ஆக இவர்கள் எல்லோருமே கட்சிக்காரர்கள், விவசாயிகள் அல்ல என்பது இப்போது புலனாயிற்று.

THIRU K. T. K. THANGAMANI : As I have already stated I do not want to gain any debating point. This is not a debating society. In the Assembly I want to place certain facts.

திருமதி த. ந. அனந்தநாயகி : சிறையில் இருபத்தைந்தாயிரம் பேர் இருந்தார்கள் என்றால் யார் யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பு எடுக்கப்படவில்லை. என் கட்சியைச் சேர்ந்தவர் பத்தொன்பதாயிரம், என்பதாக எல்லாம் சொல்லிக்கொள்வது அவரவர்களாகச் சொல்லிக்கொள்கிற ஒன்றுதான். இதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அம்மையார் அவர்கள் விஷயம் தெரிந்தவர்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு அவர்கள் விளக்கம் கொடுத்ததாக நான் ஏற்றுக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: I accept.

திருமதி த. ந. அனந்தநாயகி: இதை வைத்து எங்களுக்குள் பிளவை ஏற்படுத்தமுயல வேண்டாம். சிறையில் அரசாங்க சார்பில் யார் யார் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதாகக் குறிப்பு எடுத்தார்களா? எதை வைத்து அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இத்தனை பேர், இந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இத்தனை பேர் என்று சொல்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அங்களுக்குள் புதியதாகப் பிளவை ஏற்படுத்த விரும்பவில்லை. பிளவு இருக்கிறது.

திரு. க. சுப்பு: இன்ன இன்ன கட்சிக்காரர்கள் என்பதனால் அவர்கள் விவசாயிகள் அல்ல என்று புலனாகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கட்சிக்காரர்கள் என்றால் வேலையற்றவர்களா? விவசாயிகளாக இருக்கக் கூடாதா? தொழிலாளர்களாக இருக்கக்கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லை.

The hon. Member Thiru K. T. K. Thangamani may finish his speech in ten minutes.

THIRU K. T. K. THANGAMANI: I may be given the time taken by interruptions.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று 40 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இப்போது 30 நிமிடம் பேசியாகிவிட்டது. இன்னும் ஒரு பதினைந்து நிமிடங்களுக்குள் முடித்துக்கொள்வது நல்லது.

திரு. கே. டி. கே. தங்கமணி: இதில் உள்ள முக்கியமான விஷயம் இதுதான். முதுகுளத்தூர் சம்பவம் பற்றி நீதி விசாரணை இல்லை என்பதை நாம் எல்லோரும் கண்டித்தோம். இன்றைக்கு இதுபற்றி நீதி விசாரணை வேண்டாம் என்று அவர்களே ஒப்புக்கொண்டுவிட்டார்கள் என்கிற வாதத்தைச் சொல்லி, எங்கள் கை கட்டப்பட்டுவிட்டது என்று விட்டுவிடவேண்டாம். எந்தநிலையில் அவர்கள் நீதி விசாரணை வேண்டாம் என்கிற முடிவுக்கு வர நேர்ந்தது என்பதை உணர்ந்து நம்மைப் புனிதப்படுத்திக்கொள்ளவாவது எல்லா இடங்களுக்குமாகச் சேர்த்து ஒரு நீதி விசாரணையை நடத்திவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

போலீசைத் தாக்கினார்கள், துப்பாக்கிப் பிரயோகம் செய்யாது என்ன செய்வது என்கிற வாதம் சரியல்ல. எவ்வளவு போலீஸ்காரர்கள் காயம் அடைந்தார்கள் என்கிற விவரத்தையும் சேகரித்துப் பார்க்கலாம். ஏன் சொல்கிறேன் என்றால் மதுரை மகாநாட்டில் "போலீஸ்காரர்களைத் தாக்கி காயம் ஏற்படுத்தினால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யாமல் என்ன செய்வார்கள்?" என்பதாக ஒரு பெரும் தலைவர் பேசினார். இறந்தவர்கள் குடும்பத்திற்கு ஐயாயிரம் நிதி உதவி அளித்தோம் என்று சொல்லிக் கொள்ளலாம். இவ்வளவு பெரிய மதுரை மகாநாட்டில் இறந்தவர்களுக்கு ஒரு சின்ன அனுதாபம் தெரிவிக்கப்பட்டதா? இல்லையே. மாநகராட்சியில் ஒருவர் தான் ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். கொண்டு வந்தவரே விரட்டி அடிக்கப்பட்டார். இதைப் பார்க்கும்போது மனிதாபிமான உணர்ச்சி இல்லாதது கண்டு நான் பெரிதும் வேதனைப்படுகிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். காயம் பட்டவர்கள் விவரம் எல்லாம் வைத்திருக்கிறேன். நேரம் இல்லாத காரணத்தினால் அதற்குள் நான் போகவில்லை.

அடுத்து 2, 3, 5 தேதிகளில் செக்ஷன் 120-பி—

When two or more people join together to do an unlawful thing by unlawful means, it is conspiracy.

என்கிற இத்தப் பிரிவுப்படி எத்தனை பேர்களைக் கைது செய்திருக்கிறார்கள்? அதுவும் 120-6 ரெயில்வே ஆக்ட் படி—ரெயில்வே லைன் இல்லாத மேலூர், களக்காடு, திருப்பத்தூர், பாளையம், கூடலூர் போன்ற இடங்களில் எல்லாம் அந்த ஊருக்கு எண்பது மைல், அறுபது மைல் தள்ளி ரெயில் லைன் இருக்கிற திலேயில்—அந்த ஊர்க்காரர்கள் ரெயில்வே லைனில் விஷமம் செய்ததாக அரஸ்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இதுபற்றி திருநெல்வேலி பக்கம் கவர்னர் வந்திருந்தபோது அவரிடம் 6—8—1972-இல் மகஜர் கொடுக்கப்பட்டது. இதில் இருந்து என்ன தெரிகிறது? சம்பவம் நடக்கிற இடத்தில் எப்.ஐ.ஆர். தயாரிக்க வேண்டியது—மாஜிஸ்ட்ரேட் டிபார்ட்மெண்டு, போலீஸ் டிபார்ட்மெண்டு இங்கே இருந்து எப்.ஐ.ஆர். தயாரித்து அனுப்புவதை—அதை வைத்து அங்கே உள்ளவர்களை எல்லாம் பிடித்துப்போடுவது என்பது மிகமிகப் பரிதாபகரமான ஒன்று. உத்தமபாளையம், கூடலூர் இங்கெல்லாம் இப்படிப்பட்ட கைதுகள் நடந்திருக்கின்றன.

conspiracy to do an act under section 126 of the Railway Act.

இது சரியல்ல. இதைச் செய்யவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். பின்னர் அரசினர் சொல்லக்கூடிய வாதங்களுக்கு இப்போதே ஒரு விளக்கம் ஒன்றைக் கொடுக்கலாம் என்று கருதுகிறேன். இங்கே பார்த்தால் எங்களைக்

[திரு. கே. டி.. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 10

கவிழ்க்க முயற்சி நடப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் வடக்கே உள்ள பத்திரிகைகள் எல்லாம் எங்களை ஆதரிக்கின்றன என்கிறார்கள். வடக்கே உள்ள பத்திரிகைகள் என்ன ஸ்டேட்ஸ்மென்ஸ்—டாட்டா பத்திரிகை, ஹிந்துஸ்தான் டைம்ஸ்—பிர்லா பத்திரிகை, டைம்ஸ் ஆப் இந்தியா—தாஹர் ஜெயின், இந்தியன் எக்ஸ்பிரஸ்—கோயங்கா—இந்தப் பத்திரிகைகள் எல்லாம் மத்திய சர்க்காரைத் தாக்கி மாதிலி சர்க்காரைக் கவிழ்க்கப் பார்ப்பதாக எழுதுவது நமக்குப் புரியாதது அல்ல. இந்திய சர்க்கார் மனுபொலியை ஒழிக்க நடவடிக்கை எடுக்கிறது. முழு அளவில் அவர்கள் இறங்கிவிடாதிருக்க இவர்கள் இந்தமாதிரியான தாக்குதல் நடத்துகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இங்குள்ள 'தினமணி' பத்திரிகை விவசாயிகள் போராட்டத்தை ஆதரித்து எழுதியிருந்தால், அது எந்த ஏழை நடத்துகிற பத்திரிகை என்று அறிய விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழிலே வந்தாலே தகாறு வரும் என்று தான் ஆங்கிலப் பத்திரிகைகளைப் பற்றி சொன்னேன். இந்த மாதிரி நீங்கள் கேட்பீர்கள் என்று எதிர்பார்த்துதான் இண்டியன் எக்ஸ்பிரஸ் என்று சொல்லினேன். இவர்கள் தான் ஆதரித்தார்கள் என்று . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தினமணி தான் தமிழ்ப் பத்திரிகை. இந்த பத்திரிகையை எந்த ஏழை நடத்துகிறார்?

THIRU K. T. K. THANGAMANI: Please do not disturb me. I referred only to the established newspapers run by big monopolists.

அதுதான் என்னுடைய பாயிண்ட். அதற்குப் பதில் இல்லாவிட்டால் டைவர்ட் பண்ணுகிறார்கள். இந்த விவசாயப் போராட்டம் நடக்கிறபொழுது, உங்கள் தீர்ப்புக்கு என்ற தலைப்பிட்டு ஒரு விளம்பரம் வந்திருக்கிறது. மதுரையிலிருந்து வெளிவருகிற சூலை மாதம் 13-ம் தேதிய தினமணி பத்திரிகையிலே, 'விவசாயிகள் கோரிக்கைகளுக்கு முக்கிய காரணங்களும் அதற்கான காரணங்களும் பின்வருமாறு' என்று வந்திருக்கிறது. தமிழ்நாடு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநரால் வெளியிடப்பட்டது என்று வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளைக் கூட விளக்குவது தவறு என்றால், அதல்லாமல் வேறு என்னதான் அவர்களுக்கு வேலை என்று கருதுகிறீர்கள்?

1972 ஆகஸ்ட் 10]

திரு. கே. டி. கே. தங்கமணி : அது எந்த அளவுக்கு வந்தது என்று சொன்னால், மதுரையிலே கட்சி மாநாடு நடத்துகிறபொழுது, பேனர்கள் பூராவும் அரசால் வெளியிடப்பட்டு, தமிழ்நாடு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநரால் வெளியிடப்படுகிறது என்று போட்டு, சீல் வைத்து . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த விளம்பரங்களைக் கம்யூனிஸ்டு கட்சி மாநாட்டிலே அங்கு வருபவர்களுக்குக் கொடுப்பதற்கும் அரசு தயாராக இருக்கிறது. எங்கெங்கே கூட்டங்கள் நடக்கின்றனவோ அங்கே எல்லாம் அவைகளைக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது. அந்தக் கூட்டங்கள் கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டங்களாக இருந்தாலும் சரி, சுதந்திராக் கட்சிக் கூட்டங்களாக இருந்தாலும் சரி, காங்கிரஸ் கட்சி கூட்டங்களாக இருந்தாலும் சரி, அவர்கள் விரும்பினால், அவைகளைக் கொடுக்கச் செய்கித் துறை தயாராக இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இதை ஒரு முறையாக செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதால் என்னுடைய பாயின்ட். இப்பொழுது இந்தமாதிரி தீர்மானங்கள் செய்துகொண்டிருக்கிறீர்கள் என்றுதான் சொல்கிறேன். பின்னால் பதில் அளிக்கும்பொழுது வேறு சில விஷயங்களைச் சொல்கிறேன்.

முத்துராமலிங்கத் தேவர் ஒரு இடத்திலே சொன்னார் : 'பதவிக்கு வருமுன் அடக்கு முறையை எதிர்த்தவர்கள் பதவிக்கு வந்தபின் அதே அடக்கு முறையைக் கையாண்டார்களே, தாங்கள் நிரந்தரமாகப் பதவியில் இருக்கப் போகிறோம் என்ற எண்ணத்திலா ?

'Very many political leaders are not leaders. They are nothing but dealers. No Government can cover its weakness by means of audacity.'

'அடாசிட்டி' என்ற வார்த்தையை முத்துராமலிங்கத் தேவர் அடிக்கடிச் சொல்வார். மெஜாரிட்டி ஆன உடனே இந்த 'அடாசிட்டி' வருகிறது. உங்களிடத்தில் 'அடாசிட்டி' இருக்கிறது. 'மோர் அடாசிட்டி' நல்லதல்ல என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இப்பொழுது பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. சுப்ரிம் கோர்ட்டிலே, தமிழக சர்க்கார் பேரிலே கேஸ் போடப்பட்டிருக்கிறது. அந்த நியூசை பி.டி.ஐ. லே கரீட் செய்திருக்கிறார்கள், பி.டி.ஐ. எல்லா பத்திரிகைகளுக்கும் கரீட் செய்த நியூஸ் கொடுத்திருக்கிறார்கள். அந்த நியூஸ் எல்லா பத்திரிகைகளும் போடத் தயாராக இருக்கிறார்களா என்றால் இல்லை. இந்த நியூஸ் பிளிட்ஸ் பத்திரிகையிலே முதல் பக்கத்திலே போடப்பட்டிருக்கிறது.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 ஆகஸ்ட் 10

மூன்னுள் சீஃப் செகரட்டரி, தமிழக அரசு மீது, தனக்கு நியாயம் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளும்பொழுது, பல குற்றச் சாட்டுகளைச் சுமத்தியிருக்கிறார்கள். அந்தக் குற்றசாட்டுகள் உண்மையானுல் அல்லது அவை உண்மை என்று நிரூபிக்கப்பட்டால், அந்த குற்றச்சாட்டுகளை அரசு ஏற்றுக் கொண்டால், அல்லது சுப்ரீம் கோர்ட்டால் அவருடைய பெட்டிஷன் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, அந்த குற்றச்சாட்டுகளின் பேரில் தமிழக அரசு மீது ஸ்டிரிக் சர்ல் பால் பண்ணினுல், எந்த நியாயமான அரசும் ராஜினமாதான் செய்ய வேண்டும்.

THIRU V. KRISHNAMOORTHY: Sir, on a point of order. We have read in the newspapers that the former Chief Secretary has filed a petition in the Supreme Court and it is before the Court now. If the Speaker allowed that to be discussed, would it now amount to expecting some sort of judgment from the Court? The hon. Member cannot say that if something happened, such and such a thing should happen. That is all hypothetical.

THIRU K. T. K. THANGAMANI: I have not gone into the merits. I know my limitations. I have only quoted what has appeared in the papers.

திரு. தா. வீராசாமி: தலைவர் அவர்களே, இன்றைய தினம் சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிற வழக்கைப் பற்றி ஒன்று சொன்னர்கள். அதோடு நிறுத்தாமல் அந்த சுப்ரீம் கோர்ட் "இப்படி டிரக்ட் செய்தால்?" என்று சொல்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் இப்படி டிரக்ட் செய்யக் கூடும் என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். வழக்கு விசாரணையே இன்னும் ஆரம்பிக்கப் படவில்லை. அப்படி இருக்கும்பொழுது, சுப்ரீம் கோர்ட் இப்படி செய்தால் என்று சொல்வது அரசாங்கத்தையும், சுப்ரீம் கோர்ட்டையுமே இழிவு படுத்துவதாக இருக்கும். அப்படி இருக்கும்பொழுது பொறுப்புள்ள உறுப்பினர் திரு. தங்கமணி இப்படிப் பேசுவது முறைதானு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு போலவைத் தலைவர்: இந்த விவாதம் இன்னும் தொடரும் என்பதால், ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முக்கியமான பாயின்ட் ஆப் ஆர்டரைத்தான் எழுப்பினர்கள். கனம் உறுப்பினர் திரு. தங்கமணி அவர்களுக்கு இது தெரியும். பொதுவாக ஒரு வழக்கு என்று வேண்டுமானுல் சொல்லாம்.

1972 ஆகஸ்ட் 10] [பேரவைத் தலைவர்]

அந்த வழக்கைப்பற்றி அபிப்பிராயத்தையும் வழக்கைப்பற்றிய தன்மையையும், நீதிமன்றம் இப்படி முடிவெடுக்கும் என்றும் நாம் எப்பொழுதுமே சொல்லக் கூடாது. அதைத்தான் நம்முடைய 67-வது விதி தெளிவாகக் கூறுகிறது.

'A member while speaking must not give his opinion about or refer to any matter on which a judicial decision is pending'.

In this matter, a judicial decision is pending before the Supreme Court.

இப்படி இருக்கிற ஒரு விவகாரத்தில் வழக்கு இருக்கிறது என்று வேண்டுமானால் சொல்லலாமே தவிர, அதிலே ஒரு அபிப்பிராயத்தைச் சொல்லி, அதன்மீது விவாதம் செய்வது தவிர்க்கப்பட வேண்டியது என்பது நம்முடைய விதிமுறைகளிலே ஒன்று. உறுப்பினர் திரு. தங்கமணிக்கு மட்டுமல்ல, குறிப்பாக இந்த வழக்கு முடிகிற வரையிலும், அதைப்பற்றி விவாதிக்கக் கூடாது என்று எல்லா உறுப்பினர்களுக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. என். கணபதி: பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் அவர்கள் இந்த வழக்கில் தீர்ப்பையும் கூறி, அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதாகக் கூடச் சொல்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான், சொல்லியது சுப்ரீம் கோர்ட்டை இன்ஃப்ளுயன்ஸ் செய்யுமென்று நினைக்கவில்லை. சூலை 19-ம் தேதி சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு கேஸ் வந்திருக்கிறது என்றும் அதிலே இந்த அரசின் மீது குற்றச்சாட்டுகள் வந்திருக்கின்றன என்றும் சொன்னேன். பி.டி.ஐ.-லே அதை 5, 6 பக்கங்களுக்கு கிரீட் பண்ணியிருக்கிறார்கள். நான் பி.டி.ஐ.-லே கேட்டு காப்பி எடுத்து வாங்கி வைத்திருக்கிறேன். இன்றைக்கு கோர்ட்டிலே ஒரு பப்ளிக் டாக்குமெண்ட் இருந்தால் அதைப் பற்றி சொல்லவே கூடாதா? சென்சார் பண்ணவே கூடாதா? சப் ஜூடிஸ் என்பது பற்றியே, அதன் பொருளைப் பற்றியே நாம் பரிபூரணமாக விவாதம் நடத்தவேண்டும். சப் ஜூடிஸ் என்பது சொல்கிற நேரத்தில், எதைப்பற்றி இங்கு விவாதிக்கலாம் என்பதுபற்றி, சூல்ஸ் கமிட்டியிலே விவாதித்துக் கொண்டிருக்கிறோம். வழக்கு, எல்லா ஜனங்களும் படித்துக் கொண்டிருக்கிற விஷயம். எல்லா ஜனங்களும் வெளியிலே படித்துக் கொண்டிருக்கிற விஷயத்தை இங்கு குறிப்பிட்டதே தப்பா? பொதுவாக, சாதாரணமாக, வெளியே . . . .

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி போட்டதைப் பற்றி சொல்லுங்கள். அதைப்பற்றி இப்படி இப்படி தீர்ப்பு அளிக்கப்படலாம் என்றெல்லாம் சொல்லாதீர்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இப்படி ஒரு கேள்வி போடப்பட்டிருக்கிறது என்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இது இன்றைக்கு அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளுக்கு ஒரு உதாரணம்.

இறுதியாக, நான் ஆரம்பத்திலே எடுத்துச் சொன்ன மாதிரி, விஷயங்களின் தன்மையை ஆராய்ந்து பார்க்காமல், அதன்பிறகு அவை பற்றி கௌரவப் பிரச்னையாகக் கருதி, ஏதாவது ஒரு முடிவு எடுக்கிற போக்கு இந்த அரசுக்கு இருக்கிறது. நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இவ்வளவு பெரிய இயக்கம், போராட்டம் நடத்தி 25,000 பேர் சிறை சென்று, அரசாங்கக் கணக்குப்படி 15 அல்லது 16 பேர் மாண்டு, சிறைச்சாலையிலே 2 பேர் மாண்டு, லத்தி சார்ஜிலே 2 பேர் மாண்டு மே மாதம் 19-ம் தேதி ஆரம்பித்த இயக்கம், கடைசியிலே சூலை மாதம் 19-ம் தேதி ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அந்த ஒப்பந்தத்தை முறையாக அமுல் நடத்தவேண்டும். அந்த ஒப்பந்தத்தை அவர்கள் முறையாக அமல் நடத்துவார்களா என்பதை சென்ற காலத்திலே நடந்ததை வைத்துப் பார்த்தால் அச்சம் இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. இராம. அரங்கண்ணல்:** தலைவர் அவர்களே, அமைச்சரவைமீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் கொண்டுவருகின்ற சூழ்நிலையை எற்படுத்திக் கொண்டு எதிர்க் கட்சியிலே இருக்கின்ற தலைவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தைப் புதிய ஜனநாயக முறையை உருவாக்குகின்ற வகையிலே உடனடியாக எடுத்துக் கொண்டு இந்தச் சபை விவாதித்துக் கொண்டிருக்கிறது. விவாதத்தைத் தொடங்கிய நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்கள் நம்பிக்கை இல்லை, அதிலும் தெளிவாக 'மு. கருணாநிதி அவர்கள் தலைமையிலே இயங்குகிற அமைச்சரவைமீது நம்பிக்கை இல்லை' என்று குறிப்பிட்டார்கள். ஆனால், 'எனக்கு மிக மிக நம்பிக்கை இருக்கிறது முதலமைச்சர் மீது, அவர்கள் காதுகொடுத்து என்னுடைய கருத்துக்களைக் கேட்பார்கள் என்று கருதுகிறேன்' என்று பேசும்போது அடிக்கடி கூறினார்கள். எதோ அவர்களுடைய தோழர்களுக்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறேன் என்று சொல்வதற்காகக் கொண்டுவந்திருக்கிறார்களே ஒழிய, இடையிடையே அவர்கள் முதலமைச்சர் மீது நம்பிக்கை இருக்கிறது என்ற கருத்தைத்தான் தெரிவித்தார்கள்.

1973 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்குக் காரணமே 'அரசினுடைய எஃபிஷியன்சியை இம்புருவு பண்ணுவதற்காக' என்று ஒரு காரணத்தையும் குறிப்பிட்டார்கள். அப்படிச் சொல்லவில்லை என்று இப்பொழுது சொல்கிறார்கள். முரண்பாடுகள் நிரம்பிய போக்கு டாக்டர் ஹரண்டே அவர்களிடத்தில் இல்லை, ஆனால் அவர்கள் சார்ந்திருக்கிற கட்சி முரண்பாடுகள் நிறைந்தது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். புலியையும் தூண்டிவிடுவார்கள், அதே நேரத்தில் அந்தக் கட்சியைச் சார்ந்தவர்கள் புள்ளிமானுக்கும் ஆதரவு கொடுப்பார்கள். அவர்களுடைய பேச்சிலே நாம் முரண்பாடுகளைப் பார்த்தோம்.

என்ன என்ன குற்றச்சாட்டுகளையெல்லாம் சொல்லவேண்டுமென்று அவர்கள் இங்கே வகைப்படுத்திய நேரத்திலே மாநாட்டைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். தர்மபுரியில் நடைபெற்ற மாநாட்டு வாயிலில் ஒரு தாசில்தார் உட்கார்ந்துகொண்டிருந்தார். நன்னடத்தை சர்டிபிகேட்கள் வாங்க வேண்டுமென்று சொன்னால் அதற்காக பணம் வசூலித்துக்கொண்டு அந்தப் பணத்தையெல்லாம் மாநாட்டிற்குக் கொடுத்தார் என்று எல்லாம் சொன்னார்கள். எனக்கு உள்ள வேடிக்கையெல்லாம், நாமும்தானே சட்ட மன்ற உறுப்பினராக இருக்கிறோம், நாமும் ஏராளமாக நன்னடத்தை சர்டிபிகேட், மற்ற சர்டிபிகேட்கள் எல்லாம் கொடுக்கிறோம். எத்தனை பேர்களுக்கு அந்த தாசில்தார் சர்டிபிகேட் கொடுத்தாலும், 50 பேர்களுக்கு மேல் வந்திருக்க முடியாது. 50 பேர் கொடுத்த நன்கொடையை வைத்தா மகாநாடு நடத்த முடியும்? எவ்வளவுதான் இதனால் நிதி சேர்க்க முடியும்? அதையெல்லாம் அவர்கள் பெரிதுப்படுத்திப் பேசுவதற்குக் காரணம் அவர்களால் வேறு காரணங்களை எடுத்துக்காட்ட முடியாது, குற்றம் சாட்டவேண்டுமென்ற விருப்பத்தினால்தான் அதையெல்லாம் சொன்னார் என்பது அவருடைய பேச்சிலே தொனித்தது.

மதிப்பிற்குரிய நீண்டகால கம்யூனிஸ்ட் கட்சித் தலைவராக இருக்கக்கூடிய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மிக மிக உருக்கமாக எடுத்துச் சொன்னார்கள். போலீஸ் அடக்குமுறைபற்றிச் சொன்னார்கள். போலீஸ் கட்டுத்தான் ஆகவேண்டும், அதில் பல பேர்கள் சாகத்தான் வேண்டும் என்று யாரும் விரும்பமாட்டார்கள். அப்படி விரும்பக்கூடிய கட்சி இந்தியாவிலே இருக்கிறதா என்று பார்த்தால், 1942, 1943-ம் ஆண்டில் தஞ்சை மாவட்டத்திலே அலங்கோலங்கள் நடந்தன. வல்லபாய் படேல் அவர்கள் டெல்லியில் உள்துறை அமைச்சராக இருந்தபொழுது, அவர்களுடைய உத்திரவுப்படி எத்தனையோ பேர்கள் தெஞ்காளவில் செத்தார்கள். தஞ்சாவூர்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 ஆகஸ்ட் 10

மாவட்டத்திலே என்ன என்ன எல்லாம் நடைபெற்றது, எத்தனை எத்தனை தொண்டர்கள் இறந்தார்கள். இது எல்லாம் தெரியும். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு இப்படியெல்லாம் நடக்கவேண்டுமென்ற ஆசை. துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவேண்டும், பல பேர்கள் சாகவேண்டும். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறுவதற்குக் காரணங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். சும்மா இருக்கின்ற மக்களைத் தூண்டிவிட்டாவது வண்டிகளை சோட்டில் போடச்சொல்ல வேண்டும். பெத்தநாயக்கன்பாளையத்தில் போலீஸ் ஸ்டேஷன் இல்லை என்று சொன்னார்கள். வண்டிகளை சோட்டிலே போட்டார்கள். ஒரு போலீஸ்காரர் ஏன் இப்படி வண்டிகளை சோட்டிலே போட்டு மறிக்கிறீர்கள் என்று கேட்டார். ஒரு போலீஸ்காரர்தான் கேட்டார். அவரை 50 பேர்கள், 100 பேர்கள் சேர்ந்துகொண்டு தாக்கினால் என்ன சூழ்நிலை ஏற்படும்? கம்யூனிஸ்ட் கட்சியின் பலாத்காரத் தத்துவம் உலக நாடுகளில் எல்லாவற்றிலும் தூக்கியெறியப்பட்டு விட்டது. கம்யூனிஸ்ட் கட்சி பிறந்த மாஸ்கோவிலேயே காரியங்கள் எல்லாம் நல்ல உணர்வோடும், எல்லோரையும் மனிதர்களாகக் கருதவேண்டுமென்ற கொள்கை அடிப்படையிலேயும்தான் விவாதித்து நடத்தப்பட வேண்டுமென்று அந்தக் கட்சியின் தலைவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதெல்லாம் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், சாதாரணமானவர்கள் டி.எம்.கே.யைச் சேர்ந்தவர்கள், அவர்கள் இப்படி இருக்கலாமா? வோட்டு வாங்குவதற்கு தி.மு.க. காரர்கள்தான் தேவைப்படுகிறார்கள். ஆனால் அவர்கள் இப்படியெல்லாம் இருப்பதா, எப்படியாவது பலாத்காரத்தை ஏற்படுத்தவேண்டுமென்ற முயற்சியில் இறங்கியிருக்கிறார்கள். திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மூலமாக நான் அந்தக் கட்சியின் தலைமைக்குச் சொல்லிக்கொள்வேன். பலாத்காரத்தை வளர்க்காதீர்கள். டாக்டர் ஹாண்டே, அவர்கள் பின்னே போகிறார்கள். காங்கிரஸ்(ஒ) பின்னே போகிறார்கள். யாராக இருந்தாலும், எங்கே கிடைக்கும், எதைச் செய்யலாம் என்று அலைந்து அலைந்து பலாத்காரத்தை வளர்க்க வேண்டாம், என்று கேட்டுக்கொள்கிறேன்.

ரத்தப் புரட்சி, குத்துக்குக் குத்து, வெட்டுக்கு வெட்டு, இதுவெல்லாம் மனிதப் பண்புகள் நிரம்பிய இந்தக் காலத்தில், 25-வது சுதந்திர தினவிழாக் கொண்டாடுகின்ற இந்த நாளிலே அப்படிப்பட்ட கொள்கையை வைத்துக் கொண்டிருக்கவேண்டாம். அப்படி பலாத்காரத்தை வளர்க்க நீங்கள் முயற்சிக்கின்ற நிலையில்தான் நாட்டு மக்கள் மத்தியிலே நீங்கள் செல்வாக்கை இழந்து வருகிறீர்கள். ஆனால் எந்தக் காரியமாக இருந்தாலும் பலாத்காரம் இல்லாத

1972 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

அன்பால் சாதிக்கிறோம், பேசிச் சாதிக்கிறோம் என்ற காரணத்தினாலேதான் திராவிட முன்னேற்றக் கழகம் இவ்வளவு பெரிய வெற்றியைப் பெற்றிருக்கிறது. மேலும் பெறப்போகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஹாண்டே அவர்கள் சொன்னார்கள், எனக்கு ரொம்பச் சங்கடமாக இருக்கிறது, பப்ளிக் டிஸ்கன்டென்ட்மெண்ட் அதிகமாக இருக்கிறது, இந்த ஆட்சியைத் தூக்கியெறியவேண்டுமென்று பொதுமக்கள் சொல்கிறார்கள். அதனால்தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்திருக்கிறேன் என்று சொன்னார்கள். பொதுமக்கள் என்பவர்கள் பத்திரிகை படிப்பவர்கள் மட்டுமல்ல. பொதுமக்கள் உண்மையிலேயே முன்பிருந்த ஆட்சியை வைத்து ஒப்பிட்டு இவர்கள் என்ன என்ன நல்ல காரியங்களைச் செய்கிறார்கள் என்று ஆராய்ந்துபார்க்கிறார்களே அவர்கள்தான். அந்த ஏழைஎளிய மக்கள் தான் பிற்பட்டோர்கள் தான், தாழ்த்தப்பட்டோர்கள்தான் பொதுமக்கள். அவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆட்சியின் தன்மையை உணர்ந்திருக்கின்ற காரணத்தினாலேதான் சூலை மாதத்திலே 13 இடங்களிலே நடைபெற்ற இடைத் தேர்தலிலே கழக அரசை ஆதரித்திருக்கிறார்கள் 13 இடங்களில் இடைத்தேர்தல் நடந்தது. டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்ன 'பப்ளிக் டிஸ்கன்ட்னட்மெண்ட்' இருந்தால் அந்த 13 இடங்களில் 10 இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்காது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: 13 இடங்களில் 7 இடங்களில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்றிருக்கிறது. அதுவல்லாமல் எங்கெங்கு சுதந்திராக் கட்சி ஸ்தாபன காங்கிரஸ் கட்சி நின்றதோ அத்தனை தலைவர் களையும் . . . .

Almost all the leaders and persons who were members of the party, who were working for the party were arrested. While the D.M.K. meeting was allowed, my meeting was not. I represented to the Chief Minister that I should be granted permission in Tirunelveli or else the elections must be postponed. My only submission is the fundamental, normal practices of democracy were not allowed. This I give in clarification to my distinguished colleague, Mr. Arangannal.

[1973 ஆகஸ்ட் 10

திரு. இராம அரங்கண்ணல்: நண்பர் ஹாண்டே அவர்கள் இதைச் சொல்வார்கள் என்று எனக்குத் தெரியும். எல்லோரும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு இந்தத் தேர்தல் நடந்தது. இதைக் கூட விட்டு விடுவோம். எண்ணிக்கையைச் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழகம் 7-ம், லீக் 2-ம், கழக ஆதரவு பெற்றவர்கள் 3-ம், ஆக மொத்தம் 12. 13-ல் 12. கணக்கைத் திருத்திக் கொள்கிறேன், 10, 3.

ஆனால் அவர்கள் ஒன்றை மறந்துவிட்டார்கள். 1971-ல் பொதுத் தேர்தல் நடத்தினோம். பொதுத் தேர்தலுக்கு ஒரு ஆண்டுக்கு முன்பே பெருமதிப்பிற்குரிய ஆச்சாரியார் அவர்களும், காமராஜர் அவர்களும்—காமராஜர் கருதிக் கொண்டிருந்தார், முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குக் காரணம் இவர்கள் கூட்டு சேர்ந்ததால்தான், எப்படியும் கூட்டுகளைப் பிடிக்கவேண்டுமென்று சொல்லி—ராஜாஜியின் வீட்டிற்குச் சென்று அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெற்று ஒரு ஆண்டுக்கு முன்னாலேயே 'பப்ளிக் டிஸ்கன்டன்ட்மென்ட்' இருக்கிறது என்று ஆரம்பித்தார்கள். எல்லாப் பத்திரிகைகளும் முன்னேற்றக் கழகம் மோசம், ஊழல் ஊழல், இது நடந்து விட்டது, அது நடந்து விட்டது; முன்னேற்றக் கழகம் அதைச் செய்துவிட்டது, இதைச் செய்து விட்டது என்று ஒரு ஆண்டுக்காலம் பேசினார்கள். இப்படிப் பேசிய வர்களைப் பார்த்த மக்கள், பாவம், தி.மு.க. நல்லவர்கள் பாடுபட்டு வருமானத்தைப் பெருக்கி நன்மைகளைச் செய்தவர்கள், வயதான காலத்தில் இவர்கள் இப்படி ஏன் பேச வேண்டுமென்று சொல்லி 138 அக இருந்த எங்களை 184 ஆக ஆக்கினார்களே தவிர இதிலிருந்து பப்ளிக் டிஸ்கன்டன்ட்மெண்ட் எங்கேயிருந்தது என்று பார்த்தோம்.

ஆகவே, பப்ளிக் டிஸ்கண்டன்ட்மெண்ட் என்று, மக்கள் வருத்தமாக இருக்கிறார்கள் என்று சொன்னால், வழி தெரியாமல், தேவையில்லாமல் அமைதியாகயிருந்த நல்ல அருமையான குளத்தைத் தேவையில்லாத கற்களையெல்லாம் விட்டெறிந்து நாசமாக்குகிறார்களே என்று அவர்கள் கட்சியின் மீதுதான் பப்ளிக் டிஸ்கண்டன்ட்மெண்ட் இருக்கிறதே தவிர ஆளுங்கட்சியின் மீது இல்லை. இந்த நாட்டு மக்கள் எங்கள் மீது அதிருப்தி கொள்ள மாட்டார்கள் என்பதை அறியலாம். அப்படியே அறிய வேண்டுமென்றால் அடுத்த தேர்தல் வரப் போகிறது, வராமல் இருக்கப்போகிறதில்லை. அந்த நேரத்தில் உங்கள் கொள்கைகளைச் சொல்லி வெற்றிபெற வாய்ப்பிருக்கிறது. சுதந்திராக் கட்சியையும், ஆளுங்காங்கிரஸ் கட்சியையும், காமராஜர் கட்சியையும் கேட்டுக்கொள்வேன், தயவு செய்து கம்யூனிஸ்டு விரும்பும் வழிக்கு நீங்கள் போய்க்கொண்டே

1972 ஆகஸ்ட் 10] *[திரு. இராம. அரங்கண்ணல்]*

இருக்காதீர்கள் என்று தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன். திரு. தங்கமணி அவர்கள் சிரிக்கிறார்கள். அவர்கள் சிரிப்பதன் பொருள் எனக்குத் தெரியும். ஏனென்றால் அந்தக் கட்சியை நான் ஓரளவிற்கு அறிந்தவன். பலாத்கார எண்ணங்கள் தலைதூக்கக்கூடாது என்பதைத் தமிழ்நாட்டு மக்களும் நல்லவர்களும் விரும்புகிறார்கள். ஆனால் பலாத்கார எண்ணங்கள் தோன்றி 10, 11 பிணங்கள் விழுந்தன என்றால் அவர்களெல்லாம் யார், நம்மவர்கள்தானே 5,000 ரூபாய் கொடுத்தோம் என்றால் தர்மத்திற்காகக் கொடுக்கவில்லை. எந்த அளவிற்கு முதலமைச்சரவர்கள் வேதனைப்பட்டார்கள், சங்கடப்பட்டார்கள் என்று கூடியிருந்த எங்களுக்குத் தெரியும். நாம் பலி கொடுத்திருக்கிறோம். எனவே இத்தகைய உணர்வுகளை வளர்க்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. ஆசைத்தம்பி அவர்கள் பேசியதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் அங்கே என்ன பேசினார்கள் என்பதைப்பற்றி இன்றைய இந்து பத்திரிகையில் கொஞ்சம் தவறுதலாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது. இன்றைய இந்து பத்திரிகையில்

'If the Centre attempted to topple the Government, Tamil Nadu will try to become separate'. என்று வந்திருக்கிறது. எப்படி வந்திருக்க வேண்டுமென்றால்

. . . . . then Tamil Nadu would fight separately". என்று வந்திருக்க வேண்டும். ஏனென்றால் புலிகள் நிரம்பிய காட்டில் மான் உலாவுவதைப்போல இந்தியாவிலேயே எல்லா இடங்களிலும் ஒரே ஆட்சியின் கையில் இருக்கும் இந்த நேரத்தில் தமிழ்நாடு அரசு மட்டும் தனியாக இருந்து கொண்டு இருக்கிறது, என்ற அப்படியொரு சூழ்நிலை ஏற்படுமேயானால், தமிழ்நாடு அரசு மோகன் குமாரமங்கலத்தினுடைய சித்தாந்தங்களைக் கேட்டுக் கொண்டோ அல்லது சுப்பிரமணியத்தினுடைய வேதாந்தங்களைக் கேட்டுக் கொண்டோ அல்லது ஆச்சாரியாரின் புராணப் பிரசங்கங்களைக் கேட்டுக் கொண்டோ எந்தக் காரணத்தாலும் 'டாப்பில்' செய்யும் கட்டம் வந்தால், தனித்து நின்று முன்னேற்றக் கழகம் போராடும் சூழ்நிலை ஏற்பட்டால், தோழமைக் கட்சிகளுடன் போராடும் என்ற கருத்தில்தான் பேசினார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஒரிருவர் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசினாலும், அட்டானமியைப் பற்றிப் பேசி பிரிவினையைக் கொண்டுவரப் பார்க்கிறார்கள், பிரிவினையை விதைக்கிறார்கள் என்று பேசுகிறீர்கள். நாங்களும் எத்தனை தரம்தான் சொல்லிக் கொண்டேயிருப்போம். எங்களுக்கு ஒரு சுப்ரீம் பாடி இருக்கிறது, தலைவர் இருக்கிறார்கள்.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1973 ஆகஸ்ட் 10

நாங்கள் தனி நாடு கோரிக்கையை விட்டுவிட்டோம் என்று தெரிவித்தோம், தனி நாடு கோரிக்கை எங்கள் எண்ணம் அல்ல என்று, ஹாண்டே அவர்களின் பாஷையில் சொல்ல வேண்டுமென்றால் 'கேடகாரிகலி' சொல்லி விட்டோம். அப்படிச் சொல்லியபிறகும் இதைத்தான் கேட்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டேயிருந்தால், தேவையில்லாத குற்றச்சாட்டைச் சொல்லிக் கொண்டேயிருந்தால், யாருக்கு என்ன பலன்? அவர்கள்கூட இப்போது மேடையிலே பேசுகிறார்கள். ஹாண்டே அவர்கள் இவ்வளவு அன்பொழுகப் பேசி சட்டமன்றத்தில் நான் பார்த்தது இல்லை. திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இவ்வளவு கோபத்தோடு பேசியதை நான் சட்டமன்றத்தில் பார்த்ததில்லை. ஆனால் அவர்கள் இங்கே சொன்னார்கள் மாண்புமிகு திரு. இராஜாராம் அவர்கள், அமைச்சரவர்கள் சரித்திரத்தைப் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். இன்னும்கூட, உயர்நிலைப்பள்ளிகளில் சரித்திரத்தைக் கூடச் சொல்லிக்கொடுக்கக் கூடாது என்று சொல்வார்கள். சரித்திரத்தைச் சொல்லக்கூடாதா? கம்யூனிஸ்ட் கட்சி இப்படி இருந்தது என்று, கம்யுனிஸ்ட் கட்சியின் சித்தாந்தத்தை நம்பி செத்தார்கள், பல வீடுகள் தாக்கப்பட்டன என்று சொல்லக்கூடாதா? இவைகளைத் தடுக்க இப்படிச் செய்தார்கள், இது தான் நடந்தது என்று சொல்லக்கூடாதா?

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் அன்றைக்குச் சொன்னது,

'In what context did he say that?' The Minister was saying about History and said 'we were not a united country and therefore. . .' he gives a pause. There comes the doubt. சரித்திரத்தில் பல நாடுகளாக இருந்திருக்கின்றன, ஒரே நாடாக இல்லை என்பதை ஞாபகப்படுத்தி இப்பொழுது தனி நாடாக ஆயிற்று என்றால் பரவாயில்லை என்ற தொனியில் இருக்கிறது என்று சொன்னேனே தவிர, சரித்திரத்தில் பல நாடுகளாக இருந்தோம் "we were not united country and therefore . . . . . என்று "pause" கொடுக்கும் போதுதான் சந்தேகம் தோன்றுகிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். அசோகன் காலத்திலே இந்த நாடு இருந்த நிலை, அக்பர் காலத்திலே இருந்த நிலை, அதற்குப்பிறகு இருந்த நிலையெல்லாம் சொல்லி, இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சிகாலத்தில்தான் ஒற்றுமையாக இருந்தது என்று சொன்னேன். இப்பொழுது இருக்கும் ஒருமைப்பாட்டிற்கு

ஆகஸ்ட் 10] [திரு. க. இராசாராம்]

விரோதமாகச் சொல்லவில்லே வடக்கே இந்திரா காங்கிரஸும், தெற்கே நாங்களும் ஆளுகிறோம். எனவே சூழ்நிலேயைக் கெடுக்காதீர்கள் என்பதற் காகத்தான் சரித்திரத்தைச் சொன்னேன். (குறுக்கீடு)

திரு. இராம. அரங்கண்ணல்: எல்லா விஷயங்களேயும் நண்பர் ஹாண்டே அவர்கள் ஒத்துக் கொள்வார்கள். கூடிய சீக்கிரத்தில் இந்தப் பக்கத்திலேயே வந்து பேசப் போகிறார்கள்.

அவர்கள் சொன்ன கருத்து டி. எம். கே. செகரடரிகள் மில்லீட் செய்கி றார்கள் என்பது. இதைப்பற்றியும் நான் வலியுறுத்திச் சொல்வதற்கு ஆசைப் படுகிறேன். அண்ணு அவர்கள் முதலமைச்சராக ஆன தினமே கோட்டை யைச் சுற்றியிருக்கும் பரந்த மைதானத்தில் அதிகாரிகளே அழைத்து வைத்துக்கொண்டு சொன்னார்கள். நிர்வாகத்தைத் தளர்வாக விட்டுவிடுங்கள், நிர்வாகத்தில் யாரும் குறுக்கிடக்கூடாது, யாராவது மூன்றேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் குறுக்கிட்டால் அந்த அதிகாரிகள் என்னுடைய கவனத்திற்கு அதைக் கொண்டுவர வேண்டுமென்று சொன்னார்கள். அது கடைப்பிடிக்கப் பட்டது. அதற்குப்பிறகு முதலமைச்சர் பொறுப்பை ஏற்ற நம்முடைய கலேஞர் வந்தபிறகு அவர்களும் அதை வலியுறுத்திச் சொல்லிக்கொண்டே யிருக்கிறார்கள். கலெக்டர்கள் மாநாட்டின்போது ஒவ்வொரு நேரத்திலும் அவர்கள் சொல்வார்கள், கலெக்டர்களிடம் அவர்கள் சொல்வது எந்தக் கட்சி யினுடைய தலேயீடு நிர்வாகத்திலே வந்தாலும் எனக்குத் தகவல் கொடுங்கள், சாதாரணமாக டிரான்ஸ்ஃபர் போன்றவைகளுக்கு வந்தாலும் சொல்லுங்கள் என்று கலெக்டர்கள் மாநாட்டிலே வலியுறுத்திப் பேசுகிறார்கள், போலீஸ் அதிகாரிகள் மாநாட்டிலேயும் பேசுகிறார்கள் (குறுக்கீடு) இதை எங்கள் கட்சிக்கு வந்து பார்த்தால் தெரியும், காண்பதற்கு யோசித்தால் எப்படித் தெரியும்?

டாக்டர் எச். வி. ஹாண்டே: அந்த மாதிரி அனுப்புகிறார்களே, அதன் மேல் சீஃப் மினிஸ்டர் ஆக்ஷன் எடுக்கிறார்களா?

திரு. இராம. அரங்கண்ணல்: அவர்கள் நெருங்கி வர வேண்டும். முதலமைச்சரவர்களோடு அரை மணி நேரம் உட்கார்ந்து விவரமாகக் கேட்டால் தெரியும். கட்சியிலேயுள்ள எங்களுக்கு ஏற்படும் சங்கடம் என்ன வென்றால், கட்சித் தொண்டர்கள் சொல்கிறார்கள், எம்.எல்.ஏ. க்களிடத்திலே சொன்னு லும் நடக்க மாட்டேன் என்கிறது, முதலமைச்சரவர்களேப் போய்ப் பார்த் தாலும் அரசாங்கம் வேறு, கட்சி வேறு என்று சொல்கிறார்கள் என்று எங்கள் கட்சித் தொண்டர்கள் எங்களிடத்திலே குறைபட்டுக் கொள்கிறார்கள் தெளி

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 ஆகஸ்ட் 10

வாகப் புரிந்துகொள்ள வேண்டியது நிர்வாகத்தை நடத்துகிறவர்கள் எந்த அளவுக்குப் பொறுப்போடு இருக்கிறார்கள், எப்படி காரியங்களைச் செய்கிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். அவர்கள் பிரமையை உண்டுபண்ண முயற்சிக்கிறார்கள். மாநாடு போடுகிறார்கள் என்றால், ஏன் மாநாடு நன்றாக நடந்தால் வயிறு எரிகிறதா? நாங்கள் என்ன செய்வோம்? மக்கள் எங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள். அவர்கள் பக்கத்தில் இல்லை. அவர்கள் போன வழி, அவர்கள் கடைபிடித்த சித்தாந்தம், செய்த காரியங்கள் ஆகியவைகளினால் மக்கள் அவர்கள் பக்கத்தில் இல்லை. மாநாடுகளை நடத்துகிற கட்சி இன்றைய தினம் ஆளும் கட்சியாக இருப்பதனால்தான் மாநாடுகள் சிறப்பாக நடக்கின்றன, ஏராளமான கூட்டம் வருகிறது என்று நினைப்பது சரியல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள் விருகம்பாக்கத்தில் நடந்த மாநாட்டிற்கு வந்திருக்கிறார்கள். அப்பொழுது எங்கள் கழகம் ஆட்சி பீடத்தில் இல்லை. ஆட்சி பீடத்தில் இல்லாத காலத்தில் கூட மக்கள் அழைக்கப்பட்டு அவர்கள் அத்தனை பேர்களும் வந்திருந்தார்கள். எங்களுடைய தலைவர்கள் கொண்டாடக்கூடிய அளவுக்கு மாநாடுகள் நடத்திய கட்சி முன்னேற்றக் கழகம் தான். ஆட்சி பீடத்தில் வந்திருக்கிற காரணத்தினால், ஆளும் கட்சியாக இருக்கிற காரணத்தினால் மாநாடு நடத்த வேண்டும் என்ற ஒரு எண்ணம், ஆசை எங்களுக்கு கிடையாது.

இன்னொன்று சொன்னார்கள். ஹை பெடஸ்டலில் முதல் அமைச்சர் அவர்கள் இருக்கக்கூடாது, எதிலும் கவரவப் பிரச்னை பார்க்கக்கூடாது என்று சொன்னார்கள். அவர்களுடைய தனிப்பட்ட கவரவம் கட்சியிலும் சரி, தமிழ் நாட்டிலும் சரி, சரியாகத் தான் இருக்கிறது. அவர்கள் கவரவப் பிரச்னை பார்க்கவேண்டியதில்லை. ஆனால் எங்களோடு போன்று அவர்களுடன் வாழ்ந்து, அவர்களுடைய கட்சியிலே இருப்பவர்களுடைய சங்கடம் என்னவென்றால், பல நேரங்களில் அவர்கள் கவரவத்தை விட்டுவிடுகிறார்கள், பொதுப் பிரச்னைகளைக் குறித்து. ஏதோ முதல் அமைச்சர் அவர்கள் கவரவம் பார்க்கிறார்கள் என்று சொல்லத் தேவையேயில்லை. எந்த நேரத்தில் யார் பேசவேண்டுமென்று வந்தாலும், அவர் கவரவப் பிரச்னைக்காக யாரையாவது பார்க்கமாட்டேன் என்று சொன்னது உண்டா? மாணவர்கள் போராட்டமாக இருந்தாலும் சரி, தொழிலாளர்களுடைய போராட்டமாக இருந்தாலும் சரி, அவர்கள் கவரவப் பிரச்னையாக எதையும் பார்ப்பதேயில்லை. எல்லோருடனும் கலந்து பேச முன் வந்திருக்கிறார்கள். எல்லோரையும் கொண்டது இந்த நாடு என்ற எண்ணத்தில் எல்லோரையும் கலந்து கொண்டு, எல்லோரையும் அனுசரித்துப் போக வேண்டும் என்று காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எந்த ஹை

1972 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

பெடல்டலிலும் அவர்கள் உட்கார்ந்துகொண்டிருக்கவில்லே. ஹை பெடல் டலில் சாதாரணமாக இருக்கிற ஒருவன் உட்கார்ந்திருக்கிறானே என்று வேண்டுமானால் சிலருக்கு வயிற்று எரிச்சல் இருக்கலாமே தவிர, அவர் ஒன்றும் ஹை பெடல்டலில் இருந்துகொண்டு, பேசமாட்டேன், பார்க்கமாட்டேன் என்று சொல்லியதில்லே. சர்வோதயத் தலேவர் சின்னதுரை அவர்கள், எல்லோரும் சிறையில் இருக்கிறார்கள், அவர்களேச் சிறையிலிருந்து வெளியே விட்டால், வந்து பேசுவார்கள் என்ற ஒரு எண்ணம் இருக்கிறது என்று சொன்னவுடனேயே, சில பேர்கள் மீது வழக்குகள் இருந்தன, கேஸ்கள் போடப்பட்டிருந்தன, அப்படியிருந்தும் அப்படிப்பட்டவர்களேக் கூட உடனடி யாகச் சிறையைத் திறந்து வெளியே விட்டார்கள். எல்லாத் தலேவர்களும் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார்கள். அந்தத் தலேவர்கள் வெளியே வந்ததும் என்ன செய்திருக்கவேண்டும்? சுவாகத் ஹோட்டலில் கூடி காமராஜ் வீட்டிற்குச் சென்று ஆலோசனே கேட்கலாமா, கலியாணசுந்தரம் அவர்களே வைத்துத் தீவிரமாக நடத்தலாமா என்று ஆலோசனே நடத்தி னுர்கள். விவசாயத் தொழிலாளர்களுக்காகப் பாடுபட முன்வந்த தலேவர்கள் அந்த வழியிலே போனுர்கள். அப்படிப் போனவர்களே முதல் அமைச்சர் அவர்கள் கூப்பிட்டுப் பேசுவதற்குத் தயாராக இருந்தும், முதல் அமைச்சர் அவர்களோடு அவர்கள் பேசத் தயாராக இல்லே. ஆகவே, முதல் அமைச்சர் அவர்கள் ஹை பெடல்டலில் இல்லே. மற்றவர்கள்தான் அதற்காக வழிகளேத் தவிர்த்துவிட்டார்கள்.

இவ்வளவு பேசப்பட்டது. விவசாயிகளுக்கு, விவசாயத் தொழிலாளர் களுக்கு நன்மை செய்யாத அரசு இது என்று சொல்லப்பட்டது. விவசாயி களேப் பொறுத்த வரையில் அகில இந்தியாவிலும் மற்றவர்கள் செய்யாத காரியங்களே இந்த அரசு செய்திருக்கிறது. நகர்ப்புறங்களில் இருக்கிற மனேகளுக்கெல்லாம் வரி விலக்கு கொடுத்தது. நகர்ப்புறங்களில் ஒரு கிரௌண்டுக்குக் கீழே மனே வைத்திருப்பவர்களுக்கு அர்பன் லாண்டு டாக்ஸ் கிடையாது. நகர்ப் புறத்தில் உள்ளவர்களே அனுசரித்து, அதற்கான சட்டம் கொண்டு வந்திருக்கிறது இந்த அரசு. விவசாயிகளேப் பொறுத்த வரையில், புஞ்சை நிலத்திற்கு வரியே இல்லே என்று செய்ததும் இந்த அரசு தான்.

அது மட்டுமல்ல. நஞ்சை நிலத்தைப் பொறுத்த வரையில் 5 ஏக்கருக்குக் குறைந்த நிலம் வைத்திருப்பவர்கள் வரி கொடுக்கவேண்டாம் என்று சொல்லியதும் இந்த அரசு தான். உரம் இல்லே என்று தட்டுப்பாடு ஏற்பட்ட பொழுது, ஏராளமாக உரம் கிடைப்பதற்கு வழி செய்தது இந்த அரசு. அது மட்டுமல்ல. நாங்களும் விவசாயிகள் தான், நானும் விவசாயக் குடும்பத்

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 ஆகஸ்ட் 10

தைச் சேர்ந்தவன் தான். நகரத்திற்கு வந்துவிட்டாலும் நாங்களும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தான். முதல் அமைச்சர் அவர்களும் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர் தான். விவசாயிகளின் பிரச்னையைப் பற்றி எங்களுக்கும் நன்றாகத் தெரியும். மின்சாரக் கட்டணத்தை உயர்த்திய நேரத்தில் நாங்கள் அதிகமாகக் கூட உயர்த்தவில்லை. 1.2 பைசா தான் உயர்த்தினோம்.

மற்ற மாநிலங்களில் மின்சாரக் கட்டணம் இதைவிட அதிகமாக இருக்கிறது. ஆந்திரப் பிரதேசத்தைப் பார்த்தால் அங்கே 16 பைசா என்று கட்டணம் போடப்பட்டிருக்கிறது. கர்நாடகாவில் 12 பைசா என்று வசூலிக்கிறார்கள். கர்நாடக மாநிலம் ஏராளமாக மின்சாரம் உற்பத்தி செய்கின்ற மாநிலம். குஜராத்தைப் பார்த்தால் 17 பைசா, உத்தரப் பிரதேசத்தைப் பார்த்தால்—நம்முடைய மதிப்பிற்குரிய பிரதமர் மாநிலம்—அங்கே 23.51 பைசா, 12 பைசாவை விட கிட்டதட்ட இரண்டு மடங்கு. மகாராஷ்டிரத்தில் 18 பைசா, மேற்கு வங்காளத்தில் 19 பைசா, ஹரியானாவில் 15 பைசா, பஞ்சாபில் 13 பைசா, மத்திய பிரதேசத்தில் 13 பைசா. இப்படி மின்சாரக் கட்டணம் போடப்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களிலும் மின்சாரக் கட்டணம் அதிகமாகத் தான் இருக்கிறது மின்சாரக் கட்டணத்தை ஏன் இந்த அரசு அதிகமாக்க வேண்டியிருந்தது? கோவையிலே இருக்கிற விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாம் இதைச் செய்யவில்லை. நாம் கடன் வாங்க வேண்டியிருக்கிறது ரிசர்வ் வங்கியிலிருந்து மத்திய அரசிலிருந்து நமக்குத் தாக்கீது வருகிறது. அவைகளை வைத்துத் தான் கட்டணத்தை உயர்த்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அதே நேரத்தில் இதையெல்லாம் நம்மிடையே பேசித் தீர்த்துக் கொண்டிருக்கக்கூடும். அதைவிட்டுவிட்டு யார் இதற்கு தூபம் போட்டு காரியங்களைச் செய்ய ஆரம்பித்தார்கள் என்பதைப் பார்க்கவேண்டும்.

இது ஒரு கட்சிப் பிரச்னையாக இருந்தால் கூட பாதகம் இல்லை. ஆனால் ஏதோ ஒருவர் இதைப் போல் ஆரம்பித்தார். அதைப் பார்த்து, நமக்குக் கிடைத்தவரையிலும் ஆதாயம் கிடைக்கட்டும் என்ற முறையில் ஒவ்வொரு கட்சியாக இதில் ஈடுபட்டது. ஆகவே, எந்தக் கட்சியும் இதை ஆரம்பிக்கவில்லை. உழவர்களுக்காகப் பேசுகிற கம்யூனிஸ்டு கட்சியும் சரி, முதலாளிக் கருகப் பேசுகிற கட்சி என்று சொன்னால் டாக்டர் ஹாண்டே அவர்கள் மறுக்கப் போகிறார், அவர்கள் கட்சியும், அல்லது காங்கிரஸ் (ஓ) அல்லது காங்கிரஸ் (ஆர்) கட்சியும் ஆரம்பிக்கவில்லை. (குறுக்கீடு) திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு மன்றுடியார் அவர்களைத் தெரியும். ஏழைகளாக

1972 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

இல்லாதவர்கள், கஷ்டப்படாதவர்கள் ஆரம்பித்தார்கள். ஆரம்பித்தது யார்? ஆரம்பித்ததின் நோக்கம் என்ன? 890 ஏக்கருக்கு பால் பண்ணை என்ற பெயரால் மன்ருடியார் அவர்கள் விதிவிலக்கு பெற்றிருந்தார்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். அவர் பெருமை மிகுந்த காங்கிரஸ் கட்சியின் அமைச்சராக இருந்தவர். பெருமை மிகுந்த காங்கிரஸ் கட்சி எந்த அளவுக்கு உச்ச வரம்புச் சட்டத்தைக் கொண்டு வந்தது என்பது நமக்கெல்லாம் தெரியும். உச்ச வரம்பு 30 ஏக்கர் என்று வைத்திருந்தார்கள். அந்த நேரத்தில் 890 ஏக்கர் நிலத்தை பால் பண்ணைக்காக மன்ருடியார் அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள். அப்படி ஒதுக்கி, பால் பண்ணைக்கு அதைப் பயன்படுத்தினார்களா? மாடுகளை வளர்ப்பதற்குப் பயன் படுத்தினார்களா என்று பார்த்தால், கிட்டத்தட்ட 200 ஏக்காரவில் அவர்கள் விவசாயம் செய்திருந்தார்கள் என்று அரசாங்கம் கண்டுபிடித்தது. அரசாங்கத்தினுடைய நிலக் குழு அதைக் கண்டுபிடித்து அரசாங்கத்திற்குத் தெரிவித்தவுடனேயே, 200 ஏக்கரில் நீங்கள் விவசாயம் செய்திருக்கிறீர்களே, பம்பு செட்டு வைத்து 200 ஏக்கர் சாகுபடி செய்திருக்கிறீர்களே, செய்யலாமா என்று கேட்டதற்கு அவர் என்ன பதில் கொடுத்தார் தெரியுமா? பயிருக்கு மேலே இருக்கிற நெல் கதிரை மனிதன் சாப்பிடுவான், கீழே இருக்கிற வைக்கோலை மாடுதான் சாப்பிடும், ஆகையினால் 200 ஏக்கரில் விவசாயம் செய்திருக்கிறேன் என்று பதில் அளித்தார். மதிப்பிற்குரிய மன்ருடியார் அவர்கள் முன்னாள் காங்கிரஸ் அமைச்சர். இப்போதும் காங்கிரசில்தான் இருக்கிறார். அவர் 1,900 ஏக்கருக்குச் சொந்தக்காரர்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இப்போது வடபாதி மங்கலம் உங்கள் பக்கத்தில்தானே இருக்கின்றார்கள்?

திரு. இராம. அரங்கண்ணல்: அவர் எங்களிடம் இல்லை உங்களிடம்தான் இருக்கிறார். அடுத்த பெரிய காட்டார் என்று ஒருவர். அவர் இருக்கும் கட்சி திரு. சங்கர் தயாள் சர்மா அவர்களைத் தலைவராகக் கொண்டுள்ள கட்சி. அவர் சேலம் மாவட்ட காங்கிரஸ் மாநாட்டின் தலைவர். அர்த்தநாரீஸ்வர கௌண்டர் என்னும் அவருக்கு 700 ஏக்கர் நிலம் சொந்தம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: 700 ஏக்கர் வைத்திருக்கிறார் என்றால் அதை விட்டு வைத்த அரசினைக் குற்றம் சாட்டுகின்றீர்களா அல்லது இன்னும் விட்டு வைத்திருக்கும் அரசைக் குற்றம் சாட்டுகின்றீர்களா?

[1972 ஆகஸ்ட் 10

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: முன்புள்ள ஆட்சி அதை விட்டு விட்டது. இப்போது உள்ள ஆட்சி அவற்றைத் திரும்பப் பெறுவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அந்த முடிவை வரவேற்கிறோம். விரைவில் செயல் படுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்தக் கட்டத்தில்தான் அர்த்த நாரீஸ்வர கௌண்டர் அவர்கள் எங்கள்மீது வெகுண்டு எழுகின்றார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அவர்கள் வெகுண்டு எழவில்லை. பல்லாயிரக்கணக் கான ஏழைகள்தான் வெகுண்டு எழுகின்றார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அந்த ஏழைகள்தான் பழி வாங்கப்படு கின்றார்கள், அர்த்தநாரீஸ்வர கௌண்டர் போன்றவர்களுடைய சுகபோக வாழ்விற்காக.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, பட்டகார் பெரிய நிலப்பிரபு என்று குறிப்பிட்டார்கள். அதை எல்லாரும் ஏற்றுக்கொள்ளுகிறோம். அரசாங்கம் நிலத்திற்கான உச்சவரம்பினைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். உபரியான நிலங்களை எடுத்துக்கொள்ள இருக்கின்றார்கள். ஆனால் அதே நேரத்தில் அவர் தம்பி உங்கள் கட்சியில் இருந்த காலத்தில் அவர் நிலப்பிரபு என்பது உங்களுக்குத் தெரியாதா? சுயமரியாதை இயக்கத்திலிருந்து பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வந்த அர்சுனன் அவர்கள் நிலப்பிரபு இல்லையா? நன்கு யோசிக்க வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல்: மதிப்பிற்குரிய குமாரசாமி அவர்கள் பழைய அரசியல்வாதி. இறந்தவரைப் பற்றிப் பழித்துப் பேசக்கூடாது. ஆனால் அவரது துணைவியார் பார்வதி அர்ஜுனன் அவர்கள் எங்கள் கட்சியில் இருக்கின் றார்களா? அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, மதிப்பிற்குரிய இந்திராகாந்தி அவர்கள் கட்சி என்றுகூட சொல்லவில்லை—அவர் களுடைய பெயரை இங்கே இழுக்க விரும்பாததுதான் காரணம்—ஆனால் சோஷலிஸ தத்துவம் பேசிக் கொண்டிருக்கும் ஆளும் காங்கிரசின் மாவட்ட தலைவர் அவர். விட்டுவைத்தது தவறுதான். விரைவில் செயல்படுங்கள் என்று சொன்னார்கள் சுப்பிரமணியம் அவர்கள். விட்டுவைத்தது நாங்கள் இல்லை. வேறு கட்சி. இன்று நடவடிக்கை எடுக்கிறோம். ஆனால் ஆளும் கட்சியில் இருந்துகொண்டு சோஷலிஸ தத்துவம் பேசிக்கொண்டிருக்கும் அவர் என்ன

1973 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

செய்திருக்க வேண்டும்? அர்த்தநாரீஸ்வர கவுண்டர் அவர்கள் "எனக்குள்ளது 700 ஏக்கர். இதில் 690 ஏக்கரைத் திருப்பித் தந்துவிடுகிறேன், எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லியிருக்க வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அன்றையதினம் சோஷலிஸ்டு கட்சி சோற்றுக் கட்சி என்று கேலி பேசியவர்கள்தான் இன்று சோஷலிஸம் பேசிக்கொண்டு பதவியில் இருக்கின்றார்கள் இங்கே.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படி கேலி பேசியவர்கள் யார் என்பதைச் சொல்லுங்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: இன்று முதலமைச்சராக வீற்றிருக்கும் அன்னை கலைஞர் அவர்கள்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஒரு பெரும் தவறான தகவலை வைத்துக் கொண்டு மதிப்பிற்குரிய சுப்பிரமணியம் அவர்கள் பேசுகின்றார்கள் என்று ஐயப்படுகிறேன். சோஷலிஸ்டு கட்சி சோற்றுக் கட்சி என்று சொல்லவில்லை. வேண்டுமானால் சோஷலிஸ்டு கட்சிதான் ஏழைகளுக்குச் சோறு போடும் கட்சி என்று சொல்லியிருக்கலாம். தவறுதலாக காதில் வாங்கிக்கொண்டாரோ என்று அஞ்சுகிறேன். ஆனால் அர்த்தநாரீஸ்வர கவுண்டர் போன்ற பெரும் நிலக்கிழார் மாவட்ட மாநாட்டின் தலைவராக இருந்துகொண்டு சோஷலிஸம் பேசும் பாணி உலகத்தின் விந்தைகளிலே விந்தையாகும்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல லட்சம் ரூபாய்களை படத்தில் வாங்கும் ஒருவர் சோஷலிஸம் கொண்டாடும் ஒரு கட்சியின் பொருளாளராக இருப்பது மட்டும் எப்படி பொருத்தமாக இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: படத்தில் நடிக்க வாங்கும் தொகைக்கு கணக்கு இருக்கிறது. அதை அங்கே பார்த்துக்கொள்ளலாம். ஆனால் நிலச்சீர் திருத்தத்தின்மீதுள்ள உச்சவரம்பு விதிகளையெல்லாம் ஏமாற்றிவிட்டு, 'நாங்கள் விவசாயிகளுக்காகப் பாடுபடுகிறோம்' என்று மாநாட்டுக்குத் தலைமை தாங்கி சோஷலிஸம் பேசுகின்றார்களே, அந்த அசிங்கத்தைப் பற்றித்தான் இப்போது இங்கே பேசுகிறோம்.

திரு. இராம. அரங்கண்ணல்: திரு. சுப்பிரமணியம் அவர்கள் உண்மையிலேயே சோஷலிஸ வாதி. அவரது சோஷலிஸம்பற்றி எனக்குத் தெரியும். அதுபோன்று நமது சகோதரி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் உண்மையிலேயே சோஷலிசவாதிதான். சோஷலிசம் என்றால் சமதர்மம்.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 ஆகஸ்ட் 10

அவர்கள் தமது பணியை எல்லாக் கட்சிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்க வேண்டும், தமது பணிகள் எல்லாக் கட்சிகளுக்கும் பயன்பட வேண்டும் என்று ஒவ்வொரு கட்சியிலும் அதைப் பகிர்ந்து கொடுக்கின்றார்கள். அவர் சோஷலிஸ வாதிதான்.

திருமதி த. ந. அனந்தநாயகி: நான் என்ன சமதர்மவாதி இல்லை என்று சொல்லுகிறார்களா அல்லது கிண்டலாகச் சொல்லுகிறார? அவர் என்ன சொல்லுகிறார்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நண்பர் அரங்கண்ணல் சொல்லுவது, இதுவரையில் ஸ்தாபன காங்கிரசில் பரப்பிய சோஷலிஸம் போதும், அதை நிறுத்திவிட்டு இனி தேசிய காங்கிரசில் அதைப் பரப்பலாம் என்று பணியாற்று கின்றீர்கள் என்றுதான் குறிப்பிட்டார்.

திருமதி த. ந. அனந்தநாயகி: இது எங்கள் குடும்பச் சண்டை. அங்கே யிருந்தோம் இங்கே வந்தோம். ஆனால் உங்கள் கட்சியில் எவ்வளவு பேரை இழுத்துக்கொண்டு இருக்கின்றீர்கள்?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆக, ஒரு கட்சியிலிருந்து இன்னொரு கட்சிக்குப் போனவர்கள் எல்லாம் இழுக்கப்பட்டவர்கள் என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: எங்கள் கட்சிகளுக்குள் வித்தியாசம் இல்லை. லட்சியத்தில் எந்தவிதமான வித்தியாசமும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆக, இரண்டு காங்கிரஸுக்கும் கொள் கையில் வித்தியாசம் இல்லை என்று சொல்லிவிட்டீர்கள். இதை நான் மாண்புமிகு இந்திரா காந்தி அவர்களுடைய கவனத்திற்கு இந்தச் சபையின் மூலம் அனுப்பி வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நம்பிக்கையில்லாத் தீர்மானம்பற்றி விவாதம் செய்வது பொருத்தமாக இருக்கும். சோஷலிஸம் பற்றிய விவாதத்திற்கு வேறு மேடையைப் பார்த்துக்கொள்ளலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சோஷலிஸ்டுகள் என்றால் யார் என்று ஆளும் கட்சியிலிருந்து ஸர்டிபிகேட் பெற இங்கு யாரும் தயாராக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கூடியவரையில் தனிப்பட்டவர்களைப் பற்றி விவாதம் செய்யாமல் இருந்தால் நல்லது.

1972 ஆகஸ்ட் 10]

திரு. இராம. அரங்கண்ணல்: சோஷலிஸ்டுகளைப் பற்றிப் பேசவேண்டிய அவசியம் வந்ததற்குக் காரணம் இன்று அந்தத் தத்துவம் பற்றி அனைவருமே பேசுகிறோம். ஆனால் மாடி வீட்டில் பூத்த ரோஜா அல்ல சோஷலிசம். அது மண்ணில் பூத்த ரோஜா. எங்கள் முதலமைச்சர் மாடி வீட்டில் பூத்த ரோஜா அல்ல, மண்ணில் பூத்த ரோஜா. எனவே, எங்களைப் பொறுத்தவரையில் சோஷலிஸத்தில் உண்மையிலே நம்பிக்கை கொண்டவர்களை மதிக்கிறோம். அம்மையார் அவர்களைக் கிண்டல் செய்யவில்லை. மதிப்பிற்குரிய கே. டி. கே. அவர்களுடைய சோஷலிஸம் பற்றிச் சந்தேகம் கொள்ளவில்லை. இன்றைக்கு அவர் சோஷலிஸத்தைத் தாண்டி கம்யூனிஸத்திற்கே போய்விட்டவர்.

ஆக, அர்த்தநாரீஸ்வர கௌண்டர் போன்றவர்களை, 700 ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு சோஷலிசம் பேசுகின்றவர்களையெல்லாம் சேர்த்துக்கொண்டு இந்தக் கிளர்ச்சிக்குத் திட்டம் போட்டார்கள். சில ஏழை விவசாயிகள் நம்பினார்கள் 'இவர்களை நம்பினால் நமக்குப் பலன் கிடைக்கும்' என்று. நண்பர் குமாரசாமி அவர்களைக்கூட குற்றம் சொல்லவில்லை. ஆனால் இப்படிப்பட்ட நிலப் பிரபுக்களுடைய பின் அணியில் இந்த இயக்கம் உருவாக்கப்பட்டதன் விளைவாகத்தான் இதை உபயோகித்து பலாத்காரத்திற்கு வழிகாண விரும்பியவர்கள் இதை நன்கு பயன்படுத்திக்கொண்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் முதலமைச்சர் அவர்கள் பல முறை எடுத்துச் சொன்னார்கள், பேச்சுக்களின் மூலம் பிரச்சினைக்குப் பரிகாரம் காணலாம் என்று. ஆனால் யாராவது ஒருவர் முன்வந்து பொறுப்பேற்றுக் கொண்டிருக்கின்றார்களா? ஆளும் காங்கிரசைப் பொறுத்தமட்டில் உடனடியாக டி.என்.சி.சி. கூட்டத்தைக் கூட்டுகிறது. தீர்மானம் போடுகிறார்கள், 'விவசாயிகளுடைய போராட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று'. அந்தக் கூட்டத்திற்கு யார் வந்திருக்கிறார்கள் என்று பார்த்தால் யூனியன் அமைச்சர் மோகன் குமாரமங்கலம் அவர்கள் வந்திருக்கின்றார்கள். இன்னொருவர் உள்துறை அமைச்சர் கே. எஸ். இராமசாமி அவர்கள். இவர்களை வைத்துக்கொண்டு டி.என்.சி.சி. கூட்டத்தில் தீர்மானம் போடுகின்றார்கள். இன்றைக்கு அமைச்சர்கள்தான். ஆனால் நாளைக்கு அவர்கள் மீண்டும் இங்கே வந்து மக்களிடம் ஓட்டுக்காக வந்துதான் நிற்கவேண்டும். அவர்கள் இவற்றையெல்லாம் தாண்டிவிட்டார்கள் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் அங்கே உட்கார்ந்துகொண்டு இருக்கின்றார்கள். ஆளும் காங்கிரஸ் டி.என்.சி.சி. யைக் கூட்டி அவர்கள் முன்னால் தீர்மானம் போடுகின்றார்கள். 'அங்கே போய்ப் பார்த்தோம், இங்கே போய்ப் பார்த்தோம், அங்கே மோகன் வந்தார் இங்கே மோகன் வந்தார்' என்றெல்லாம் மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் அடிக்கடி சொன்னார்கள். அது பிரச்சினை இல்லை.

[திரு. இராம. அரங்கண்ணல்] [1972 ஆகஸ்ட் 10

திராவிட முன்னேற்றக் கழகத்தின் உதவியைப்பெற்று உயர்ந்தவர்கள் எல்லாம் இன்றைக்கு நம்மைக் குறை கூறுகிறார்கள். நாம் யார் யாருக்கு உதவி செய்தோமோ அவர்களே இன்றைக்கு நம்மை எதிர்க்கிறார்கள். அது நம்முடைய அதிர்ஷ்டவசம். தி.மு. கழகத்திற்கு அது ஒரு வரப்பிரசாதம் என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. இப்போதுள்ள நிலையில் எல்லோரு மாகச் சேர்ந்து தி.மு. கழக அரசை அகற்றிவிட வேண்டும் ; அதைக் கவிழ்த்து விட வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதற்கு ஒரு சாதனமாக இருக்கு மென்று இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

அங்கே அது நடக்கிறது, இங்கே இது நடக்கிறது ; போலீஸார் போகவில்லை —நடவடிக்கை எடுக்கவில்லை, லா அண்டு ஆர்டர் கெட்டு விட்டது என்றும் சொல்கிறார்கள். சுராஜ்யா பத்திரிகையிலே எழுதுகிறார்கள். பத்திரிகையிலே பார்த்தவுடன் தமிழ்நாட்டிலே அது நடக்கிறது, இது நடக்கிறது பார்த்தீர்களா என்று கிளர்ச்சி நடத்துகிறார்கள். வன்முறையைத் தூண்டுகிறார்கள். எப்படி யாகிலும் முன்னேற்றக் கழக அரசைக் கவிழ்த்துவிட வேண்டுமென்று நினைக் கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டு மக்கள் அப்படி அராஜகத்தில் ஈடுபடுபவர்கள் அல்ல ; வன்முறையில் ஈடுபடுபவர்கள் அல்ல என்பதை நாம் நன்கறிவோம்.

சிம்சன் நிறுவனத்தைப் பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். சிம்சன் பிரச்சினையை வைத்தே இந்த மாநிலத்தை அலைக்கழிக்க வேண்டு மென்பது பலருடைய ஆசை. ஆனால் அதற்கு யாரும் செவி சாய்க்க மாட்டார்கள். அந்தக் கம்பெனியை நல்ல முறையில் நடத்துவதற்காக—சுமூக மான முடிவு ஏற்படுவதற்காக முன்னேற்றக் கழகத் தலைவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். ஒரு சுமுகமான நிலை ஏற்படக்கூடிய நேரத்தில் மோகன் குமாரமங்கலம் தலையிட்டால் மீண்டும் குழப்பமான நிலை உருவாகி யுள்ளது. அவருடைய திறமையில் நமக்கு சந்தேகமில்லை. அவர் கம்யூனிசத்தை நன்கு கற்றவர். பெரிய தலைவர். மெத்தப் படித்தவர்—லண்டனிலே போய் கம்யூனிசத்தைப் படித்து வந்தவர். அவருடைய தலையிட்டால் கிளர்ச்சி உருவாகிறது. இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிற டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட அம்மாதிரியான போக்கை வெறுப்பவர். எனக்கு நன்றாகத் தெரியும், ஹாண்டே அவர்கள் சமாதானப் பிரியர். எப்பொழுதும் சமாதானத்தையே விரும்புபவர். சிம்சன் தகராறில் ஒரு சுமுகமான முடிவு ஏற்படுவதற்காக முதலமைச்சர் அவர்கள் என்னை அனுப்பினார்கள். நான் சிம்சன் தொழிலாளர்கள் அனைத்துத் தரப் பினரையும் சந்தித்தேன். அவர்கள் எல்லோரும் என்னுடன் நல்ல முறையிலே அணுகினர்கள். தொழிலாளர்கள் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக

1972 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

இருந்தாலும் அவர்கள் நம்முடைய சகோதரர்களே. அவர்கள் எப்படியாவது சிம்சன் கம்பெனி திறக்கப்பட்டு, உள்ளே போய் வேலை செய்ய வேண்டுமென்ற ஆவல் உள்ளவர்களாக இருக்கிறார்கள். வேலைக்குச் செல்லத் தயாராக இருக்கிறார்கள். விரைவிலே அந்தக் கம்பெனி திறக்கப்படுவதற்கு முயற்சி செய்து வருகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: மூடிக்கிடக்கின்ற சிம்சன் தொழிற்சாலையைத் திறப்பதற்கு முயற்சி எடுத்து வருவதாகச் சொன்னீர்களே. அது இப்போது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. இராம. அரங்கண்ணல்: தொழிலாளர்களைச் சந்தித்து, ஒரு சுமுகமான முடிவை உருவாக்குவதற்காக முதலமைச்சர் அவர்கள் என்னை அனுப்பியிருக்கிறார்கள். தொழிலாளர்கள் மத்தியில் கோபமோ விரோதமோ இருக்கக் கூடாது. பிரச்சினைகளை எல்லோரும் கலந்து பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று சொன்னேன். என்னுடைய இந்த முயற்சிக்கு மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். மனிதர்கள் அன்புடன் பழகவேண்டும். அந்த அன்பு உள்ளம் இல்லையென்றால்—மாறுபட்ட கருத்துக்கள் இருக்குமானால் முன்னேற முடியாது. அந்தத் தொழிலாளர்கள் அன்புள்ளம் கொண்டவர்களாகத்தான் இருக்கிறார்கள். ஆனால் சில சிக்கல்கள் இடையிலே அவர்களை அலைக்கழித்துக் கொண்டிருக்கின்றன. அவைகளை நான் இங்கே சொல்லக்கூடாது. சொன்னால் அதனால் மேலும் பல பிரச்சினைகள் வரும். அது விரும்பத்தக்கதல்ல.

இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கை இல்லை என்று சிலர் சொன்னாலும் நாட்டு மக்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம் நீடித்து நிலைத்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். முன்னேற்றக் கழக அரசு ஏற்பட்ட பின்னால், தமிழ்நாடு எந்தத் துறையிலே சோடை போயிருக்கிறது? இந்தியத் தூணைக் கண்டத்திலே இருக்கிற எல்லா மாநிலங்களையும் எடுத்துக்கொள்வோம். எந்தத் துறையிலே முன்னேற்றக் கழகம் பின்தங்கி இருக்கிறது? முன்னேற்றக் கழகம் வந்த பின்னால் பஸ்கள் தேசியமயமாக்கப்பட்டிருக்கின்றன. பெரிய பஸ் முதலாளிகளை நீக்கிவிட்டு—அவர்களை ஒழித்துவிட்டு என்ற வார்த்தையைக் கூட சொல்லவில்லை—தமிழ் நாட்டிலே பஸ்களைத் தேசியமயமாக்கியிருக்கிறோம். இது ஒரு சாதனையா இல்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இந்தியாவிலேயே ஒன்றிரண்டு மாநிலங்களைத் தவிர வேறு எந்த மாநிலத்திலாவது அதைச் செய்திருக்கிறார்களா என்று கேட்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

[திரு. இராம. அரங்கண்ணல்]

அதுமட்டுமல்ல. 224 கோடி ரூபாயாக இருந்த வருமானத்தை நம்முடைய முன்னேற்றக் கழக அரசு 394 கோடி ரூபாயாக உயர்த்தி இருக்கிறதா இல்லையா? நான் பொருளாதார நிபுணர்களைக் கேட்க விரும்புகிறேன், எந்தத் துறையிலாவது நாங்கள் பின்னடைந்திருக்கிறோமா? வருமானத்தைப் பெருக்கிய அதே நேரத்தில் எங்காவது கெடுபிடி செய்திருக்கிறோமா? இல்லையே. ஏழை எளியவர்களுக்கு, சிறிய வியாபாரிகளுக்கு விலக்குகள் அளித்திருக்கிறோம். முன்பு 10,000 ரூபாய்வரை விற்று முதல் செய்யக் கூடியவர்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருக்கிறது. அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அதை 15,000 ரூபாயாக உயர்த்தினார்கள். கலைஞர் அவர்கள் 15,000 அல்ல, 25,000 என்ற அளவுக்கு சலுகை அளித்துள்ளார்கள். முன்பு 75,000 ரூபாய்வரை வருமானம் உள்ளவர்கள் 'கம்பவுண்டிங்' வரி செலுத்தலாம் என்றிருந்தது. அதை இப்போது ஒரு லட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. முன்பு விற்பனை வரிக்கு உட்பட்டிருந்த சுமார் 110-க்கு மேற்பட்ட பொருட்களுக்கு இப்போது விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டிருக்கிறது. உப்பு, தேங்காய், அரிசி மாவு, தென்னை நார் போன்ற 110 பொருட்களுக்கு மேல் விலக்களிக்கப்பட்டிருக்கிறது. இவையெல்லாம் முன்னேற்றக் கழக அரசின் சாதனையா இல்லையா என்று கேட்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல. 1,500 பேர் வாழுகின்ற கிராமங்களுக்கெல்லாம் சாலை போட்டுத் தீரவேண்டுமென்ற திட்டத்தை அகில இந்தியாவிலேயே இந்த மாநிலம் தான் போட்டிருக்கிறது. எல்லாக் கிராமங்களுக்கும் மின்சார வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று திட்டமிட்டு, ஒரு முன்னேறி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறதே. இது சாதனை இல்லையா?

அடுத்து குடிசைப்பகுதிகளை மாற்றி செம்மைமிகு வீடுகளை அமைத்துக் கொடுக்க குடிசைமாற்று வாரியத்தை அமைத்திருக்கிறோம். அதற்கு நான் பொறுப்பு வகிக்கின்ற காரணத்தால் அதைப்பற்றி இங்கே அதிகமாகப் பேசுவது பொருத்தமுடையதாகாது என்று நினைக்கிறேன்.

25 வருட காலமாக குடிநீர் வேண்டும், புரொட்டெக்டெட் வாட்டர் வேண்டும், புரொட்டெக்டெட் வாட்டர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தோமே. கிடைத்ததா? இன்று அதற்காக ஒரு வாரியத்தையே ஏற்படுத்தி— குடிநீர் வாரியத்தை ஏற்படுத்தி, நகரில் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் தூய குடிநீர் கிடைக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தைப்போட்டு, 20 கோடி ரூபாய் செலவில் இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவுக்கு

1972 ஆகஸ்ட் 10] [திரு. இராம. அரங்கண்ணல்]

இங்கே செயல்படுத்திவருகிறோம். இது பாராட்டுக்குரியதல்லவா? (மணியடிக்கப்பட்டது) இன்னும் 10 நிமிடங்கள் பேசுவதற்கு அனுமதி கேட்கிறேன். (டாக்டர் எச். வி. ஹாண்டே: பேசுங்கள்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் (டாக்டர் ஹாண்டே) எப்படி பேசச் சொல்லலாம்?' பேசுவதற்கு அனுமதி கொடுக்க வேண்டியது நான். இன்னும் ஐந்து நிமிடத்தில் முடித்துவிடுங்கள். ஏற்கெனவே நீங்கள் 45 நிமிடம் பேசிவிட்டீர்கள்.

திரு. இராம அரங்கண்ணல்: அகில இந்தியாவிலேயே பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று ஒரு அமைச்சரை நியமித்திருப்பது தமிழ்நாட்டில்தான். அமைச்சர் நியமிக்கப்பட்டது மட்டுமல்ல. பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் செலவிடப்பட்ட தொகையின் அளவும் அதிகரித்துள்ளது. 1956-ம் ஆண்டுவரை பிற்படுத்தப்பட்டவர்களுக்காகச் செலவிடப்பட்ட தொகை 90 லட்சம் ரூபாய். இன்றையதினம் கிட்டத்தட்ட அவர்களுக்காக நாலே முக்கால் கோடி செலவிடப்படுகிறது. இது அரசின் சாதனையா இல்லையா என்று கேட்க ஆசைப்படுகிறேன். முக்குலத்தோருக்கு 3 கல்லூரிகள், யாதவர்களுக்கு ஒரு கல்லூரி, ஹரிஜன மக்களைப் பொறுத்தவரையில் 1966-67 இல் இருந்ததைவிட இரண்டு மடங்கு தொகை அதிகப்படுத்தப்பட்டு இன்றைக்கு 3 கோடி செலவிடப்பட்டது என்றால் இன்றையதினம் 8 கோடி ரூபாய் ஹரிஜன மக்களுக்காகச் செலவிடப்படுகிறது. கல்வித் துறைக்கு 1966-67 இல் 44 கோடி என்றால் இப்போது 96 கோடி ரூபாய், கிட்டத்தட்ட இரண்டு மடங்கு அதிகமாகச் செலவிடுகிறோம். 1966-67 இல் 105 கல்லூரிகள். இன்றையதினம் 64 கல்லூரிகள் அதிகமாக்கப்பட்டிருக்கின்றன. அன்று 2,300 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தன என்றால் இன்றைக்கு 2,600 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. இதுபோல சாதனைகளை விவரித்துக் கொண்டே போகலாம். நேரம் இல்லாத காரணத்தினால் சுருக்கிக்கொள்கிறேன்.

விடுதலைப்பெற்று வெள்ளிவிழாக் கொண்டாடுகிற 25 ஆம் நல்லாண்டில் தான் இன்றையதினம் டெல்லியினர் தமிழ்நாட்டைப் பாராட்டி கேடயம் வழங்குகின்றனர். அரிசி உற்பத்தியிலே தமிழ்நாடுதான் முன்னணியில் இருக்கிறது என்பதற்காக, இத்தகைய பெருமைமிக்க கேடயத்தை தமிழ் நாட்டுக்குப் பெற்றுத் தந்தது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அல்லவா? சிந்திக்க வேண்டும், திராவிட முன்னேற்றக் கழகத்தினிடத்தில் மக்கள் நம்பிக்கை வைத்தார்கள். வைத்திருக்கிறார்கள். எதிர்காலத்திலும், வைக்கத் தான் போகிறார்கள். இன்றைக்கு நம்பிக்கை இன்மைத் தீர்மானம் கொண்டு

[திரு. இராம அரங்கண்ணல்] [1972 ஆகஸ்ட் 10

வந்துள்ளவர்களைப் பார்த்து நான் சொல்கிறேன். பலாத்காரத்தைத் தூண்டி விட வேண்டுமென்றே யாரோ சதி செய்கிறார்கள், யாரோ இம்போர்ட் செய்கிறார்கள். (குறுக்கீடு) திரு. கே. டி. கே. தங்கமணிக்கு என்ன இந்த அலர்ஜி?

திரு. கே. டி. கே. தங்கமணி: அப்படி நீங்கள் பேசுகிறபோது ஒரு அலர்ஜி இருக்கத்தான் செய்கிறது. யார் பலாத்காரத்தைத் தூண்டிவிடுகிறார்கள் என்பதை விளக்க வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல்: மற்றவர்கள் உயிரை பலியிடவேண்டுமென்கிற சக்திகள் தமிழ்நாட்டில் தலைதூக்கவிட முடியாது. அதைத் தமிழ்நாட்டில் உரு வாக்கிவிட வேண்டாம் என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன். கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரை எந்த இடமாக இருந்தாலும் ஒட்டிகொள்வது—வன்முறைகளைத் தூண்டுவது—பழியை அரசாங்கத்தின் மீது போடுவது—எத்தனை நாளைக்கு இந்த அரசியல்?

திரு. கே. டி. கே. தங்கமணி: பலாத்காரத்தைக் கையாண்ட விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதை எடுத்துப் பார்த்தால் கம்யூனிஸ்ட் கட்சி யினுடைய செயல்கள் அதிகமா, எவற்றின் செயல் அதிகம் என்று தெரியும். அந்தப் பட்டியலை எடுத்துப் பார்த்தாலே போதும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: பலாத்காரம் செய்திருக்கிற புள்ளி விவரத்தைப் பார்த்தாலே தெரியும் என்கிறார். பலாத்காரம் செய்வதையே தம் கொள்கையாக சில அரசியல் கட்சிகள் வைத்துக்கொண்டிருப்பதையும் நாடு உணரும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து திரு. கே. பி. கோபால் பேசுவார்.

திரு. கே. பி. கோபால்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்று பேரவையில் கொண்டுவரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆத ரித்து எனது கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நம்பிக்கை இல்லை என்று சொல்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்று—அரசு நிர்வாகத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும் அளவு தலையிடுகிறார்கள் என்பதும் ஒன்று. முன்பு பேசிய உறுப்பினர் குறிப்பிட் டார்கள், தாங்கள் அறிஞர் அண்ணா வழியில் செல்கிறவர்கள்—நிர்வாகத்தில் தலையிடுவதில்லை என்று.

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. பி. கோபால்]

ஒரு உதாரணம் சொல்கிறேன். பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் 8—6—72இல் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார். அட்டை கார்டுகள் மூலம் அரிசி, ஜீவி விநியோகம் பற்றி—எல்லோரைப் பகுதிகளில் உள்ள மக்களுக்குக் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் விநியோகிக்க வேண்டும் என்பது அந்த உத்தரவு. அடுத்த ஒரு வாரத்திற்குள் அவரே 17649/72 A4 16—6—72-இல் தான் போட்ட உத்தரவை மாற்றி ஒரு தனிப்பட்ட நபருக்கு அந்த அனுமதியை அளித்து உத்தரவு போட்டிருக்கிறார். அதற்கான காரணம் என்ன என்று சொல்கிறார் தெரியுமா?

Petition of Thiru Jagadeesan, dated 15th June 1972 and oral representation of Thiru Rajangam, M.P. thereon,

என்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் ராஜாங்கம் நேரில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மனுப்போட்ட சகதீசன் என்பவருக்கு 5 வார்டுகளுக்குச் சப்ளை செய்ய உத்தரவு போடுகிறேன் என்கிறார். கூட்டுறவு ஸ்தாபனத்திற்கே 4 வார்டுகள் தான். இந்தத் தனிப்பட்ட நபருக்கு 5 வார்டுகள். இந்த சகதீசன் திரு. ராஜாங்கத்தினுடைய மைத்துனர். இது அரசியல் தலையீடு இல்லாமல் வேறு என்ன?

மேலும் குடும்ப கார்டு முறை அமலுக்கு வந்து தனிப்பட்ட முறையில் கார்டுகள் எல்லாம் வழங்கப்பட்ட பிறகும் சில தனிப்பட்டவர்களுக்கு சொந்த முறையில் அரசி கொண்டுவர நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட் கொடுக்கிறார்கள். அவர்கள் அரிசியைக் கொண்டுவந்து மக்களுக்கு விநியோகிப்பதில்லை. அடுத்த மாநிலத்திற்குக் கடத்தல் செய்கிற தன்மையைத் தான் பார்க்கிறோம். இப்படி எதற்காக அனுமதி வழங்க வேண்டும்?

நேற்றுப் பேசிய உணவு அமைச்சர் அவர்கள் கள்ளக் கடத்தல்காரர்களிடம் இருந்து பறிமுதல் செய்யப்படுகிற அரிசி 10% நன்கொடையாக அளிக்கப்பட்டு விடுகிறது, செய்தியைச் சொல்பவர்களுக்கு ஆயிரம் நன்கொடை அளிப்பதாகச் சொன்னார்கள். ஆலை கடலூர் பகுதியில் இதுபோல கைப்பற்றப்படுகிற அரிசியைத் தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு மாறாக அரசாங்க கிடங்குகளுக்கு அனுப்பலாம். அல்லது கிராமச் சாவடி மூலம் மக்களுக்கே விநியோகிக்கலாம். தனிப்பட்டவர்களிடத்தில் கொடுப்பது எந்த வகையில் நியாயம் என்பது புரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பெல்ட் ஏரியாவில் இருக்கிறவர்களுக்குக் கார்டுகள் கொடுத்திருக்கிறோம். விநியோகம் செய்யும் பொறுப்பை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. கன்னியாகுமரியைப் பொறுத்தவரையில்தான்

[திரு. ப. உ. சண்முகம்] [1972 ஆகஸ்ட் 10

அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறது. பறிமுதல் செய்த அரிசி தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்திருப்பதாக உறுப்பினர் சொல்கிறார். ஸ்டாக் பண்ண இடம் இல்லாத காரணத்தினால் கூடக் கொடுத்து வைத்திருக்கச் சொல்லியிருக்கலாம். அதை விசாரிக்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு சங்கத்திற்குக் கொடுக்காமல் தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கலாமா என்றார். கூட்டுறவு சங்கம் ஒரிடத்தில் சரியான முறையில் இயங்கவில்லை என்றால், அங்கே கூட்டுறவு சங்கத்தின் மூலம் கொடுக்க முடியாது. அதற்காகக் கொடுக்காமலும் இருக்க முடியாது என்கிற நிலையில் தனிப்பட்டவர்கள் மூலம்தான் கொடுக்க வேண்டியிருக்கிறது. சென்னையிலேயே ஒரு கூட்டுறவு சங்கம் சரியாக நடைபெறவில்லை. அதற்காக இங்குள்ள மக்களுக்கு ஜீனி கொடுக்காமல் இருக்க முடியுமா? வேறு யாரை விட்டாவது கொடுத்துத் தான் தீரவேண்டும். அது தப்பாக முடியாது.

திரு. கே. பி. கோபால்: அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. நான் குறிப்பிட விரும்புவது, பெரியகுளம் கோட்டாட்சித் தலைவர் இரண்டாவதாகப் பிறப்பித்த, 16—6—72 உத்தரவில் அந்த கூட்டுறவு ஸ்தாபனங்களுக்குக் கொடுக்கப்பட்ட உரிமங்கள் ரத்து செய்யப்படவில்லை. உரிமங்களையெல்லாம் ஒரு தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினருடைய மைத்துனருக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்று தான் சொல்ல விரும்புகிறேன். அந்த ஆணையின் நகலைக் கூட, வேண்டுமானால், கொடுக்கத் தயாராக இருக்கிறேன்.

மற்றும், மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய நியாயமான கோரிக்கைகள் கூட ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பதற்கு என்னுடைய சொந்த அனுபவத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கேரள மாநிலத்தையொட்டி, பெல்ட் ஏரியா என்று கூறப்படுகிற இடத்தில் எங்களுக்கு ஏலக்காய்த் தோட்டம் இருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர் இராஜாங்கம் அவர்களுடைய உறவினர்களுக்கும் அங்கு ஏலக்காய்த் தோட்டங்கள் இருக்கின்றன. அவர்களுடைய உறவினர்கள் சார்பில் 16—10—1967-ல் ஒரு மனு கொடுக்கப்படுகிறது. தங்களுக்கும், ஏலக்காய்த் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அரிசி எடுத்துச் செல்ல அனுமதி வேண்டும் என்று மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. 24—10—67-ல் ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 8 நாட்களுக்குள் அனுமதி அளித்து ஒரு உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த உத்திரவை மேற்கோளாகக் காட்டி, நாங்களும் மற்ற விவசாயிகளும் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் ஒரு மனுவைக் கொடுத்தோம். அவர்களுடைய தோட்டங்களுக்குப் பக்கத்தில் எங்களுடைய தோட்டங்களும் இருக்கின்றன. ஆகவே, எங்களுக்கும் அரிசி எடுத்துச் செல்ல அனுமதி வேண்டு

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. பி. கோபால்]

என்று கேட்டோம். மீண்டும் 1969-ம் வருடம் ஆகஸ்டு மாதம் நினைவூட்டும் கடிதம் ஒன்று அனுப்பினோம். இருந்தாலும், 10—10—69 தேதியிட்ட உணவு இலாகா உத்தரவில், நவதானியங்கள் மட்டும்தான் கொண்டு செல்ல முடியுமே தவிர, அரிசி கொண்டு செல்ல முடியாது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே ஆண்டு, டிசம்பர் மாதம், மீண்டும் ஒரு மனு கொடுத்ததற்குப் பின்பு, 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம் எங்களுக்கு அனுமதி அளித்து உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். இதிலிருந்து, தங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு 10 கிங்களிலே இந்த உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும், ஆனால் நாங்கள் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் கேட்டதற்கு, 1970-ம் ஆண்டு அக்டோபர் மாதம்தான் உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதும் தெரிகிறது. மாற்றுக் கட்சியினருக்காக இந்தப் பாகுபாடு காட்டப்பட்டிருக்கிறது என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த அரசு நடுநிலையாக இருந்து அரசாங்கக் கொள்கைகளை விமர்சிக்கும் பத்திரிகைகளுக்குப் பாதுகாப்பு அளிக்காமல், காழ்ப்புணர்ச்சி காட்டுகிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே இந்த அரசின்மீது நம்பிக்கையில்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

சிம்சன் விவகாரத்திற்கும் அலை ஓசைக்கும் எத்தவித சம்பந்தமும் இல்லை. இருப்பினும், அலை ஓசை அலுவலகம் ஒரே நாளில் மூன்று முறை தாக்கப்பட்டிருக்கிறது. மேலும், துக்ளக் பத்திரிகை, அரசாங்கத்தின் மீது குறை சொல்லுபவர்களுடைய கடிதங்களையும் அதற்கு அரசு அதிகாரிகளுடைய விளக்கங்களையும் பிரசுரித்துக் கொண்டிருந்தது. அது அரசாங்கத்திற்கும் நல்லது. ஒரு சில அதிகாரிகள் தவறு செய்தால், அதை அரசாங்க கவனத்திற்குக் கொண்டு செல்ல முடியாது. துக்ளக் இப்படி, அதிகாரிகளுடைய விளக்கத்தை வெளியிட்டு வந்ததன் காரணமாக, எந்த விளக்கத்தையும் கொடுக்கக் கூடாது என்று அரசாங்க அதிகாரிகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

கடலூரிலே என். எஸ். கே. பொன்னையா கவுடர் உயர்நிலைப் பள்ளிக்கு அருகாமையிலே, சாராயக் கடை ஒன்று இருக்கிறது. அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று நான் மாவட்ட கலெக்டருக்கு மனு செய்தேன். அந்தப் பள்ளிக்கும் சாராயக் கடைக்கும் சுமார் 1½ பர்லாங் தூரம் இருக்கிறது. ஆகவே, அந்த சாராயக் கடை அகற்றப்பட வேண்டியதில்லையென்று கலெக்டர் அவர்கள் சொன்னார்கள். நான், உடனே, முதலமைச்சர் அவர்களுக்கு, அந்தப் பள்ளிக்குச் செல்ல ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. 1½ பர்லாங், 3 பர்லாங் இடைவெளி என்பதல்ல. பள்ளிக்கூடத்திற்குப் போவதற்கும் வருவதற்கும் இடையூறாக சாராயக் கடை இருக்கிறது. ஆகவே, அதை மாற்ற வேண்டுமென்று நான்

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மைத் தீர்மானமும், அமைச்சரவையின் தனியொரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்

[திரு. கே. பி. கோபால்] [1972 ஆகஸ்ட் 10

கோரினேன். கலால் மற்றும் மது விலக்கு காரியதரிசியிடமிருந்து, இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 22-ம் தேதி ஒரு கடிதம் வந்தது. அதில் பள்ளிக்கூடம் கிராமத்தின் ஒரு புறத்தில் இருக்கிறது என்றும், சாராயக் கடை மறு புறத்தில் இருக்கிறது என்றும் கூறி, நான் கொடுத்த மனுவின் கோரிக்கையைப் பரிசீலனை செய்யாமல் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். கலெக்டர் 1½ பர்லாங் இடைவெளி என்கிறார். ஆனால் கலால், மதுவிலக்கு காரியதரிசி, சாராயக் கடை கிராமத்தின் ஒரு புறத்திலும் பள்ளிக்கூடம் கிராமத்தின் மறுபுறத்திலும் இருப்பதாகக் கூறுகிறார். எனவே, கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. காரணம், அந்த பள்ளிக் கூடத்தின் நிர்வாகி, எம்.எல்.ஏ. வாகிய நான் என்பதை இங்கு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் நடந்த விவசாயிகள் போராட்டத்தின்போது, ஜனநாயகத் திற்கும் நியாயத்திற்கும் புறம்பாக இந்த அரசு நடந்து கொண்டது என்பதால் இந்த அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லையென்று கூறிக்கொள்ள விரும்பு கிறேன். கைது செய்யப்பட்ட விவசாயிகள் மீது என்னென்ன குற்றங்கள் சாட்டப்பட்டிருக்கின்றன என்பதை டாக்டர் ஹாண்டே அவர்களும் கே. டி. கே. தங்கமணி அவர்களும் குறிப்பிட்டார்கள். நானும் அதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாடு சட்டப் பேரவை செய்தித் தாளில் நான் மத்திய சிறைச்சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகச் செய்தி வந்திருக்கிறது. 25—6—71-க்கு ஒரு நாள் முன்ன தாகவே நான் மதுரையிலே வைக்கப்பட்டிருந்தேன். என்னுடன் போராட்டத் தில் கலந்து கொண்டவர்கள் மீது வழக்கு தொடர வேண்டும், சட்டமன்ற உறுப் பினர்கள் மேல் வழக்கு தொடர வேண்டாமென்று அரசு கூறியிருக்கிறது. மற்ற வர்கள் உறுதியை இழந்து விட வேண்டாமென்று நானும் விவசாயிகளோடு உறுதியாக இருந்தேன். கே. டி. கே. தங்கமணி அவர்களைக் கைது செய்து அன்று மாலையே விட்டு விட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் நீங்கள் சட்டமன்ற உறுப்பினர்களை நீக்கிவிட்டு மற்றவர்கள் மீது வழக்குப் போட வேண்டுமென்ற நோக்கத்தோடு காரியங்களைச் செய்கிறீர்கள் என்றுதான் கூற விரும்புகிறேன்.

ஜூலை மாதம் 5-ம் தேதி நடந்த பந்தையோட்டி பல உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டதற்குக் காரணம், 2-ம் தேதி நடைபெற்ற விளக்கக் கூட்டங்கள்தான் என்று கூற விரும்புகிறேன். 5-ந் தேதி பந்துக்கு எல்லோரும் தயாராகிக் கொள்ளுங்கள் என்று 2-ம் தேதி விளக்கக் கூட்டங்களில் கூறினார்கள். 144 தடை உத்திரவு யார் யாருக்குப் போடப்பட்டது. யார் யார் தவறு செய்கிறார்களோ,

1972 ஆகஸ்ட் 10] [திரு. கே. பி. கோபால்]

யார் யார் சட்டம் ஒழுங்குக்குப் பாதகம் விளைவிக்கிறார்களோ, அவர்களை எல்லாம் கைது செய்திருக்க வேண்டும். அப்படி இருக்க ஒரு சாராரைமட்டும் கைது செய்து விட்டு, மற்ற குழப்பம் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப் போலீஸ் தவறிவிட்டது.

போடிநாய்க்கனூரிலே ஜூலை 5-ம் தேதி ஒரு மூடப்பட்ட கடையை, ஒரு கூட்டம் திறக்கச் செய்தது. அங்கிருந்த மக்கள் கூட்டம், அவர்களைப் பிரித்து செல்லுங்கள் என்று கேட்டுக் கொண்டது. ஆனால் வழக்கு தொடரப்பட்டதே, இந்தப் போராட்டத்தை ஆதரித்தவர்கள் மீது. ஜூலை 3-ம் தேதி மதுரையிலிருந்து திருச்சி சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட பெரியகருப்பன் இறந்ததைப் பற்றி திரு. கே. டி. கே. அவர்கள் சொன்னார்கள். அவர் உடல் நலம் இல்லாதவராக இருந்திருந்தால் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருப்பார். ஆனால், அவர் திருச்சி சிறைக்குச் சென்ற ஒரு சில தினங்களிலே இறந்தார் என்றால், அதற்கு இந்த அரசுதான் காரணம் என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மதுரை சிறைச்சாலையிலே ஆயிரம் பேர் இருக்கக்கூடிய பகுதியிலே 4,000 பேரை வைத்திருந்தார்கள். மதுரை சிறைச்சாலைக் கண்காணிப்பாளர் ஓரளவு மனசாட்சி உடையவராக இருந்ததால், நாங்கள் கூறிய எங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்தார். அங்குள்ள ஒரு பகுதியிலேரை ஜூலை மாதம் 3-ம் தேதி திருச்சிக்கும் பின்பு அடுத்து வேறொருக்கும் மாற்றினார்கள். ஆனால் 'பத்த்'ஐ யொட்டி ஆயிரம் பேர்கள், இரண்டாயிரம் பேர்கள் என்ற அளவில் போராட்ட வீரர்களைக் கைது செய்த நேரத்திலே அந்தச் சிறைச்சாலைகளிலே சுகாதாரம் பாதிக்கப்பட்டது. மதுரையிலிருந்து கைது செய்யப்பட்டவர்களை மற்ற நீதிமன்றங்களுக்குக் கொண்டு சென்றுவிடலாம். ஆனால் அவர்களையெல்லாம் ஒரே பஸ்ஸிலே கொண்டு செல்ல முடியாது, பிரித்தாலும் அவர்கள் எல்லோருக்கும் எஸ்கார்ட் கொடுக்கவும் முடியாது. இந்த நிலையில் அரசாங்கம் தனி பஸ்கள் அவர்களுக்காக ஏற்பாடு செய்து கொடுக்கவில்லை. அவர்கள் மணிக்கணக்காக பஸ்ஸுக்காகக் காத்து நிற்க வேண்டியிருந்தது. ஜூலை மூன்றும் தேதியிலிருந்து வழக்குகள் சம்பந்தமாக நீதிமன்றங்களுக்குச் செல்கிறவர்களுக்கு எஸ்கார்ட் கொடுக்கப்படவில்லை. எனவே, நீதிமன்றத்திற்குக் கொண்டு செல்லப்படவில்லை.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

தமிழர் படையைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தமிழர் படை இல்லை என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எங்கள் பகுதியில் உள்ளவர்கள் சொல்லியதை நான் சொல்கிறேன். எங்கள் பகுதியில் தமிழர்

[திரு. கே. பி. கோபால்] [1972 ஆகஸ்ட் 10

படை என்ற அட்டையை ஒட்டிக்கொண்டுதான் ஜூலை ஐந்தாம் தேதியன்று ஈடுபட்டார்கள். ஆகவே இந்த வகையில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்து இருப்தால் நம்பிக்கையில்லை என்ற தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன்.

கோயம்புத்தூரிலும் சென்னையிலும் பெரிய பெரிய மௌன ஊர்வலங்கள் நடைபெற்றன. சென்னையில் நடைபெற்ற ஊர்வலத்தில் ஒன்றரை லட்சம் பேர்கள் கலந்துகொண்டார்கள். நான் மிகைப்படுத்திச் சொல்லவில்லை. திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் நேரில் கண்டதை, கூறியதைத்தான் சொல் கிறேன். அந்த மௌன ஊர்வலத்தில் செல்கிறவர்களுக்குக் கூடப் பாதுகாப்பு இல்லாத நிலைமை ஏற்பட்டது. குடந்தை ராமலிங்கம், பிரஸிடென்ஸி கல்லூரிக்கு முன்னாலே அவர் தாக்கப்பட்டார். திண்டுக்கல்லிலே தாக்கப்பட்டார்கள். ஜேம்ஸ் என்பவர் சென்ட்ரல் ஸ்டேஷனிலே தாக்கப்பட்டிருக்கிறார். கல்லூரியில் தேர்தல் நடந்தால், அங்குள்ள மாணவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத நிலைமை இருக் கிறது. மதுரையிலே யாதவர் கல்லூரி, தியாகராசர் கல்லூரி, எஞ்சினியரிங் கல்லூரி, காரைக்குடியிலே கலைக்கல்லூரி மூடப்பட்டிருக்கின்றன. மாணவர் களுக்குக் கூடப் பாதுகாப்புக் கொடுக்க முடியாத நிலைமை இருப்பதால் இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்று கூறி என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நம்பிக்கை யில்லாத தீர்மானத்தை எதிர்த்து சில வார்த்தைகளை நான் இந்த அவை முன் வைப்பதற்கு முன்பு, துப்பாக்கிச் சூட்டில், துரதிருஷ்டவசமாக தமிழ்நாட்டில் நடைபெற்ற இந்தச் சூட்டிலே இறந்த அனைவருக்கும் என்னுடைய அனுதாபத் தையும் என்னுடைய கட்சியினுடைய அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்டு என்னுடைய பேச்சைத் துவங்க ஆசைப்படுகிறேன்.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய எனது மதிப்பிற்கும் மரியா தைக்கும் உரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் மிகத் தயக்கத்தோடு இந்தத் தீர்மானத்தை இந்த அரசுக்கு விரோதமாக இந்தச் சபையிலே எப்படி வாதாடு வது என்ற முறையிலே பேசினார்கள். சாதாரணமாக, தீர்மானம் கொண்டு வந்திருப்பது இந்த அரசு மீது நம்பிக்கை இல்லை, இந்த அரசை ஆட்சியி லிருந்து அகற்ற வேண்டுமென்று சொல்லித்தான். ஆனால் அவர்களுடைய பேச்சுத் தொடக்கத்தில் இந்த ஆட்சியை அல்லது கடசியை அல்லது கலைஞர் ஆட்சியை அகற்றுவதை நான் விரும்பவில்லை என்று சொல்லிவிட்டார்கள். அதைப்பற்றி நான் மெத்த மகிழ்ச்சியடைகிறேன். நம்முடைய அருமை நண்பர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1972 ஆகஸ்ட் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

சாதாரணமாக எதிர்க்கட்சியாக இருக்கிற கட்சிகள் ஜனநாயக நாடுகளிலே பார்த்தோமானால் எதிர்க்கட்சித் தலைவர்கள் குறிப்பாக சட்டமன்றத்திலே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் இயங்குகின்றபோது அதை ஒரு ஷேடோ கேபினட் என்றுதான் சொல்வார்கள். முதலமைச்சர் அவர்கள் அமர்ந்திருக்கின்றாரே அதற்கு எதிராக அமர்ந்திருக்கின்றவர்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள், நீ நகன்றால் நான் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறேன், அதற்குத் தயாராக இருக்கிறேன் என்று சொல்லக்கூடிய முறையிலேதான் ஷேடோ கேபினட் என்ற பதத்தைப் போட்டிருக்கிறார்கள். ஷேடோ பிரைம் மினிஸ்டர், ஷேடோ பாரின் மினிஸ்டர், ஷேடோ பைனான்ஸ் மினிஸ்டர், ஷேடோ கேபினட் என்றெல்லாம் சொல்வார்கள். எதிர்க்கட்சித் தலைவர்கள் அவ்வளவு பொறுப்பாக முதலமைச்சர் அவர்கள் எவ்வளவு பொறுப்போடு நடந்துகொள்கிறார்களோ, அந்த அளவிற்குப் பொது மக்கள் நலனைக் கருதி, எதிர்க்கட்சித் தலைவர்களும் நடந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் அந்தப் பதத்தைப் போட்டிருக்கிறார்கள்.

நாட்டினுடைய மக்கள் நன்மைகளைக் கருதி, நாட்டு மக்களுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், தேவைகளை நாட்டிலே பூர்த்தி செய்வதற்கு ஏற்ற சூழ்நிலை, அமைதி நிலை, சட்டம் பாதுகாக்கப்படுதல் போன்றவற்றை ஏற்படுத்துவது போன்ற கடமைகள் ஆட்சியில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, ஆட்சியை இறக்கிவிட்டு வரத்தயாராக இருக்கக் கூடியவர்களும்தான் அந்தப் பொறுப்புணர்ச்சியுடனும், கடமையுணர்ச்சியுடனும் நடந்துகொள்ள வேண்டுமென்ற தத்துவத்தை ஜனநாயக மரபுகளை மிகப் பெரிய ஜனநாயக வாதிகள் பெரிய நாடுகளிலே ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். 'லாஸ்ட் ரிஸார்ட் டு ரிமூவ் தி கவர்ன்மெண்ட்' தான் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது. இந்தக் கடைசி ஆயுதத்தைப் பயன்படுத்துகிறவர்கள், நாம் எல்லாம் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கிறோம், இந்தச் சபைக்கு வருவதற்கு முன்னதாக பல வாக்குறுதிகளைத் தந்து வந்திருக்கிறோம், அவற்றை நிறைவேற்றுகின்ற வகையிலே, மக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையிலே அமைந்திட உதவ வேண்டுமே தவிர, சாதாரணக் காரியங்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும். அவர்களை எனக்கு மிக நன்றாகத் தெரியும். இன்னும் தெளிவாகச் சொன்னால் என்னுடைய பிரதிநிதி அவர்தான். நான் வாணியம்பாடித் தொகுதி மக்களின் பிரதிநிதியாக இருந்தாலும் நான் குடியிருக்கிற பெரியமெட் தொகுதியின் பிரதிநிதியாக டாக்டர் ஹாண்டே அவர்கள்தான் இருக்கிறார்கள். 1967-ஆம் ஆண்டிலே எங்களுக்குக் கட்டளையிடப்பட்டது. திருமதி அனந்தநாயகி அவர்களுக்குத்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1972 ஆகஸ்ட் 10

தெரியும். அண்ணு அவர்களும், காயிதே மில்லத் அவர்களும் கட்டளையிட்டார்கள். டாக்டர் ஹாண்டே அவர்களுக்காக நாங்கள் அந்தத் தேர்தலிலே தெருத்தெருவாக அலைந்தோம், ஏன், திருமதி அனந்தநாயகி அவர்களுடைய சுடுசொற்களையும் தாங்கியிருக்கிறோம். டாக்டர் ஹாண்டே அவர்கள் நிதானப் போக்கு உடையவர்கள்தான். என்னவோ தெரியவில்லை, காலம் மாறுகிறது, மேலது கீழும், கீழது மேலும் செல்கின்ற கொடுமையான காட்சியைப் பார்க்கிறோம்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் கொண்டுவந்ததைப்பற்றி நான்கூட நினைத்துப் பார்த்தேன். ஏதோ பெரிய குற்றச்சாட்டுகளை அள்ளிவீசப் போகிறார், அதைக் கேட்டு அமைச்சர்கள் எல்லோரும் திணறப்போகிறார்கள் என்று நினைத்தேன். நம்பிக்கையில்லாத் தீர்மானம் வருகிறபோது மக்களுடைய வாக்குறுதிகளை மீறி, உணவு இல்லை, இருக்கை இல்லை, உடையில்லை, கல்வி இல்லை, மக்களுக்கு மனமகிழ் சாதனங்கள் இல்லை, சுதந்திரமாக இருக்க வழிவகைகள் இல்லை என்று குற்றச்சாட்டுகளையெல்லாம் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் அவைகள் ஒன்றையும் சொல்லவில்லை டாக்டர் ஹாண்டே அவர்கள். நாட்டிற்கு என்ன தேவை என்று சொல்லவில்லை. அவர்கள் சொல்லியதெல்லாம், இந்தத் தப்பாக்கிச் சூடு தமிழகத்தில் நடந்தது, விவசாயப் போராட்டம் என்ற பெயரிலே போராட்டம் நடத்தப்பட்டதே அந்தப் போராட்டத்தை இந்த அரசு எப்படிச் சமாளித்தது என்ற ஒரு அடிப்படையிலேயும், அரசினுடைய குறைபாடுகள் நிர்வாகத்திலே மிக அதிகமாக இருக்கிறது என்ற அடிப்படையிலேயும், கட்சியினுடைய நிர்வாகிகள் அரசினுடைய நிர்வாகங்களிலே குறுக்கிடுகிறார்கள் என்பதற்கான உதாரணங்களும், இவைகளைத்தான் அவர்கள் எடுத்துச் சொன்னார்களே தவிர, எப்படி இந்த ஆட்சி, கலைஞர் கருணாநிதி அவர்களுடைய தலைமையிலேயிருக்கின்ற இந்தத் தகைமைசால் ஆட்சி தமிழக மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை, எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம், எல்லா மக்களுக்கும் படிப்பு, எல்லா ஊர்களிலும் நல்ல சுகாதார வசதி, உணவுத் தட்டுப்பாடு இருந்த நிலைமையை மாற்றி எல்லா மக்களுக்கும் கேட்கின்ற நேரத்திலே உணவு, எல்லா மக்களுக்கும் சுதந்திரம், அவர்கள் விரும்பும் வாழ்க்கையை நடத்தக்கூடிய சூழ்நிலை ஆகிய இந்தச் சூழ்நிலைகளையெல்லாம் பெற்றுத் தாராத முறையிலே எப்படி இந்த அரசு இயங்குகிறது என்று எடுத்துச் சொல்லியிருந்தால் நாங்கள் மகிழ்ச்சியடைந்திருப்போம். ஆனால் ஹாண்டே அவர்கள் அவைகள் எதையும் சொல்லவில்லை. மக்களுக்கு வேண்டியதைப்பற்றி அவர்களுக்குக் கவலையில்லை, அரசியலில் தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே அருமை நண்பருடைய கவலையாகிவிட்டிருக்கிறதே என்று கவலையடைகிறேன்.

1972 ஆகஸ்ட் 10]

டாக்டர் எச். வி. ஹாண்டே: மக்களுடைய அடிப்படைத் தேவைகளை மிகமிக உன்னிப்பாகக் கவனிக்க வேண்டுமென்ற காரணத்தினால்தான், மக்கள் தமிழ் நாட்டில் தைரியமாக, சுதந்திரமாக வாழ வேண்டுமென்பதற்காகத்தான் இம்மாதிரியான தலையீடு தவறு என்று சொன்னேன். மக்களுடைய தேவை எனக்கு நன்றாகத் தெரியும். எனக்குத் தெரியும் என்பது அவர்களுக்கும் தெரியும்.

திரு. எம். ஏ. லத்தீப்: ஆகையால் இந்தத் தீர்மானத்தை நம்முடைய ஹாண்டே அவர்கள் அரசியல் காரணங்களுக்காகத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் மிகுந்த பணிவன்புடன் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் அமைச்சரவையை நடத்துவது, அரசியலை நடத்துவது என்றால் அதற்கு முறை ஒன்று இருக்கிறது. அந்த முறையோடு நடத்த வேண்டும். நான் ஏற்கனவே சொன்னேன், "ஷேடோ கேபினெட்" என்று வைத்திருக்கிறார்கள் என்று. ஆகையால் அந்த வகையிலே பொறுப்பை ஏற்க நாம் எப்பொழுதும் தயாராக இருப்போம் என்று இருப்பதும் அரசியல்தான். ஆனால் அதற்காக அமைச்சரவைக்கு எவ்வளவு பொறுப்பு இருக்கிறதோ, அதே பொறுப்பு நமக்கும் இருக்கிறது என்று நினைக்கக்கூடியவர்கள் எதிர்க் கட்சிகளாக, எதிர்க்கட்சித் தலைவர்களாக இருக்கவேண்டும். பிறகு இந்தப் பிரச்னை என் எழுந்தது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

விவசாயிகள் சுடப்பட்டார்கள், விவசாயிகளில் சிலர் மாண்டார்கள், 14 பேர் மாண்டார்கள். இதற்குக் காரணம் என்ன என்பதை நினைந்துப் பார்க்க வேண்டும். சாதாரணமாக பகுத்தறிவு நமக்கு இருக்கிறது. ஒரு ஆட்சி, அதுவும் மக்களால் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பெரும் பான்மை பெற்றிருக்கும் ஒரு பெருமை மிகுந்த ஆட்சி, மக்களைச் சுட்டு வீழ்த்த வேண்டுமென்றும், போலீசாரை எப்படி வேண்டுமானாலும் நடந்து கொள்ளுங்கள் என்றும் சொல்லியிருக்குமா என்று பார்க்கவேண்டும். ஒரு கட்சி, மக்களுடைய வாக்குகளைப் பெற்று ஆட்சி நடத்தக்கூடியவர்கள், போலீசாரிடம் நீங்கள் மக்களைச் சுட்டு வீழ்த்துங்கள் என்று கட்டளை பிட்டிருக்குமா, அவ்வளவு மனிதாபிமானமற்றவர்களா இங்கே இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். அவர்கள் சொன்னார்கள், நம்முடைய நல்லசேனைபதி சர்க்கரை மன்றுடியாரிலிருந்து பாளையக்காரர்கள், பட்டயக்காரர்கள் இவர்களைப்பற்றியெல்லாம் சொன்னார்கள். சர்க்கரை மன்றுடியார் போன்றவர்கள் 1995 ஏக்கர் நிலத்தை மாட்டுப் பண்ணைக்காக வைத்துக்கொள்வதற்கு அன்றைய ஆட்சி ஒதுக்கித் தந்திருந்தது, சட்டத்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1972 ஆகஸ்ட் 10

நிலே ஒரு ஓட்டை வைத்தது என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால் இன்றைய ஆட்சி, கலைஞர் அவர்களுடைய தலைமையிலேயிருக்கும் இந்த ஆட்சி தமிழ் நாட்டிலே இந்த நாட்டினுடைய ஜீவாதாரமான பொருளாதாரத்திற்குப் பாராமாயிருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழ்கையிலே வளம் கண்டிடவேண்டும், அவர்கள் வாழ்க்கையில் புரட்சி ஏற்பட வேண்டும், மறுமலர்ச்சி ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் இதுவரையிலே 20 ஆண்டுகளாகச் சாதிக்க முடியாத சாதனைகளே நாம் 6 ஆண்டுகளிலே சாதித் திருக்கிறோம் என்றால், அதற்குக் காரணம் நம்முடைய அரசின் முன்னேற்ற மான திட்டங்கள், சீர்திருத்தமான திட்டங்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய சீர்திருத்தமான திட்டங்களைக் கொண்டு வந்ததால் தான் இன்றைக்கு இந்த எதிர்ப்புகள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் பத்திரிகைகளிலே படித்து மட்டுமல்ல, நிலச்சீர்திருத்த உச்சவரம்புச் சட்டம் சம்பந்தமாகத் தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களுக்கும் நான் சென்று வந்திருந்தேன்.

அருமை நண்பர்கள் பலர் இங்கே இருக்கிறார்கள். மாண்புமிகு சக சட்ட மன்ற உறுப்பினர்கள், அவர்கள்கூட அங்கே என்னைப் பார்த்திருக்கிறார்கள். என், நம்முடைய அருமை நண்பர் திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்கள் உண்ணா விரதம் வைத்துக்கொண்டிருந்த நேரத்திலே கோவையிலே நான் இருந்தது அவர்களுக்குத் தெரியும். அதுமட்டுமல்ல, கோவையிலே திரு. ஜி. டி. நாயுடு அவர்களின் பங்களாவில் தங்கியிருந்தபொழுது, இந்தக் கூட்டாய்வுக் குழு உறுப்பினர்கள் தங்கியிருந்தபொழுது அங்கே விவசாயச் சங்கம் என்று வைத்திருக்கும் அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகள் எங்களில் சிலரைச் சந்தித்துப் பேசியது நினைவிற்கு வருகிறது. அவர்கள் என்ன பேசினார்கள் என்பதைச் சொன்னால், அவர்கள் இல்லாத இந்தச் சபையில் சொல்வது அழகல்ல என்பதால் சொல்லாமல் விட்டுவிடுகிறேன். என் இதைச் சொல் கிறேன் என்றால், மிஸ்டர் சி. சுப்பிரமணியம், நம்முடைய மத்திய அமைச்சர், மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப் பட்டது. என்ன கேள்வி கேட்கப்பட்டது? இங்கேயெல்லாம் இவர்கள் சொன்னார்கள், 10½ காசு அதிகம் என்று. அதைக் குறையுங்கள் என்று சொன்னார்கள். அங்கு அவர்கள் என்ன சொல்லிவிட்டார்கள்? நீலியிலே குட்டுவது மாதிரி சொல்லிவிட்டார்கள். உத்தரப் பிரதேசத்தைப் பார், பஞ்சாப்பைப் பார், 15 காசு, 25 காசு, 13 காசு, 16 காசு என்று இருக்கிறதே, நீ அங்கேபோய் 10½ காசு, 12 காசு அதிகம் என்று சொன்னால் இங்கே அவர்கள் தம்மீது சாடுவார்கள், ஆகையால் சும்மா உட்கார் என்று மேலே

1972 ஆகஸ்ட் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

மிருப்பவர்கள் குட்டினர்கள். சுப்பிரமணியம் சொல்லியிருக்கிறார், மற்றவர்கள் சொன்னால் கவலையில்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், திட்டமிட்ட செயல் என்பதற்காகச் சொல்கிறேன். எங்கள் எதிர்ப்பைக் காட்டுவது இந்த மின் கட்டணத்தைத் தமிழக அரசு உயர்த்திவிட்டது என்பதற்காக அல்ல, இன்றைக்கு தமிழகத்திலேயிருக்கும் திராவிட முன்னேற்றக் கழக அரசு தன்னுடைய ஆட்சி பலத்தை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சியாகிய எங்களை வளர விடாமல் தடுக்கிறார்கள், இது சுப்பிரமணியம் சொல்கிறார்கள். எங்களை வளர விடாமல் தடுக்கிறார்கள், ஆகையால் இந்த எதிர்ப்பு என்று சொல்கிறார்கள். நிதானம் உள்ளவர்கள், தமிழ்நாட்டிலுள்ள நிதானம் உள்ளவர்கள் இதைச் சிந்தித்துப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். சாதாரணமாக இந்த மின் கட்டண எதிர்ப்புத்தான் என்றால் ஆட்சேபணை இல்லை. ஆனால் I question their very bona fides. அதுதான் இங்கேயிருக்கிறது. ஆகையால் இவர்கள் என்ன செய்திருக்கிறார்கள்? நாம் வளர்வதற்கு வழி என்ன, நாம் வளர வேண்டுமானால் ஏதாவது ஒரு முறையிலே நாட்டிலே குழப்பத்தை ஏற்படுத்த வேண்டும். அப்படிக் குழப்பத்தை ஏற்படுத்தினால் அமைதியைக் காக்க சர்க்கார் கடமைப்பட்டு இந்த அரசு ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்கும். மிகவும் நிதானமாக இந்த அரசு இருக்கிறது. கருணாநிதி என்பவர்—அவர்கள் பேசுவதை நான் சொல்கிறேன்—மிகவும் நிதானமான ஆள், அவரிடம் ஜாக்கிரதையாக அணுக வேண்டும், ஏதாவது நாட்டிலே குழப்பம் ஏற்படும் வகையில் இயங்கினால்தான் சாதிக்க முடியும் என்று எண்ணியிருக்கிறார்கள்.

அதிலே யார் இருக்கின்றார்கள்? நான் கோவையிலேயிருந்து அரசாங்க பஸ்ஸிலே வந்துகொண்டிருந்தேன், இந்தப் போராட்டம் நடந்துகொண்டிருந்த பொழுது. அங்கே 10 பேர் பஸ்ஸிலே ஏறினர்கள். எங்கே செல்கிறீர்கள் என்று நான் அவர்களைக் கேட்டேன். நாங்கள் வேலூருக்குப் போகிறோம் என்று அவர்கள் சொன்னார்கள். ஏன் வேலூருக்குப் போகிறீர்கள் என்று நான் கேட்டேன். 10 பேர் ஜெயிலிலே இருக்கிறார்கள், பார்க்கப் போகிறோம் என்று சொன்னார்கள். நீங்கள் யார், உங்களுக்கு எவ்வளவு நிலம் இருக்கிறது என்று ஒருவரைக் கேட்டால் 40 ஏக்கர் இருக்கிறது என்றும், இன்னொருவர் 50 ஏக்கர் இருக்கிறது என்றும், இன்னொருவர் 150 ஏக்கர் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள். என்ன 150 ஏக்கரா என்று கேட்டதற்கு தனித்தனியாகப் பிரித்து எங்கள் குடும்பத்திலே வைத்திருக்கிறோம் என்று சொல்கிறார்கள். யார் என்று தெரியாமல் பஸ்ஸில் வந்திருக்கிற சாதாரண வழிப்போக்கர்கள்

[திரு. எம். ஏ. லத்தீப்] [1972 ஆகஸ்ட் 10

விவசாயிகள் என்று சொல்லக்கூடிய அவர்கள் இவ்வளவு பெரிய நிலச்சுவான்தார்களாக இருந்துகொண்டு, அவ்வளவு பெரிய நிலச்சுவான்தார்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இல்லை. பொதுவாக நான் கேட்கிறேன், துப்பாக்கிச் சூடு பற்றி எங்களுக்குத் தெரியாதா? நமது துணைத் தலைவர் அவர்கள் இங்கு இல்லை என்று நினைக்கிறேன். திரு. எல். கணேசன் அவர்கள் இருக்கிறார்கள். துப்பாக்கிச் சூடு இந்த நாட்டில் நடந்தது பற்றி நாங்கள் அறியாததா? 1965-ல் நடத்தப்பட்ட மகா கொடுமையான காட்சி இந்த நேரத்தில் ஞாபகம் வருகிறது. தமிழ் நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, சென்னையில் மத்திய சிறையில் ஒரே அறையில் போட்டு அடைக்கப்பட்டு இருந்த நிலைமையை எல்லாரும் அறிவார்கள். அவர்களுக்குப் போடப்பட்ட உணவு என்ன தெரியுமா? எந்த இடத்தில் உரத்திற்காகப் பயன்படுத்த வேண்டும் என்று மண் போட்டு கழிவுப் பொருள்கள் மூடிவைக்கப் பட்டிருந்தனவோ, அந்த இடத்தில் வளர்க்கப்பட்ட கீரைகளைக் குழம்பாகச் செய்து, சாதாரணமாக மாடுகள் கூட சாப்பிடமுடியாத மக்காசோளத்தில் கூழ் செய்து அதை நம்முடைய மாணவர்களுக்குக் கொடுத்தார்கள். அதை எடுத்துக் கொண்டு அப்படியே நான் பக்தவத்சலம் அவர்களிடம் சென்று கேட்டேன். துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அவர் இப்பொழுது இங்கு இல்லை. பக்தவத்சலம் அவர்களிடத்தில் நான் சென்று கேட்டபொழுது, ஏன் இப்படி என்று கேட்டதற்கு, அவர்களுக்கெல்லாம் பிரியாணி போடுவார்கள் என்று நினைத்தீர்களா என்று சொல்லி, அவர்களைப் பிசைந்து விடுவேன் "ஐ வில் கிரஷ் தெம்" என்று கூறினார்கள். நமது துணைத் தலைவர் திரு. பி. சீனிவாசன் அவர்கள் அப்பொழுது இவர்களால் தேடப்பட்டு வெளியே விரட்டப்பட்டு எதோ ஒரு இடத்தில் இருந்தால் நம்முடைய பெயர் வருகிறதே என்று அவர்கள் விஜயவாடாவில் இருந்தார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: இவர்கள் இப்பொழுது மக்கா சோளக் கஞ்சி கொடுக்காமல் அரிசிக் சோறு போடுகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: அவர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். அந்தக் காலத்தில் நிலைமை எப்படி இருந்தது என்பதைத் தான் சொல்லப் போகிறேன். திரு. தங்கமணி அவர்கள் திரு. பக்தவச்சலத்திற்காக இவ்வளவு தூரம் பரிந்து பேசுவது பற்றி மகிழ்ச்சி. நான் என்ன சொல்

1972 ஆகஸ்ட் 10] [திரு. எம். ஏ. லத்தீப்]

நேரன் என்ருல் துப்பாக்கிப் பிரயோகத்திற்குக் காரணம் என்ன? வன்முறைச் செயல். பெத்துநாயக்கன் பேட்டையில் (திருமதி த. ந. அனந்தநாயகி: பெத்துநாயக்கன் பாளையம், ஊர் பெயர் தெரியாமலேயே கனம் அங்கத்தினர் பேசுகிறார்கள்.) சென்னையைச் சேர்ந்தவனுதலால் பெத்துநாயக்கன் பேட்டை என்று வருகிறது. பெத்துநாயக்கன் பாளையத்தில் போலீஸ்காரர்கள் லாரிக்கு உள்ளே இருந்து சுட்டார்கள் என்று அவர்கள் சொன்னர்கள். லாரிக்குள்ளேயிருந்து சுட்டார்கள் என்று குற்றச்சாட்டைச் சொன்னர்கள். சாதாரணமாகக் காமன்சென்ஸ் உள்ளவர்களுக்குத் தெரியும், லாரிக்கு உள்ளே யிருந்துகொண்டு துப்பாக்கிப் பிரயோகம் நடக்கிறது என்ருல், அதனுடைய ரேஞ்சு எவ்வளவு இருக்கும் என்று யோசித்துப் பார்க்கவேண்டும். எஸ்.கி.சி.-யில் இருந்தால் கூட போதும், மிலிடரியில் இல்லாவிட்டால் கூட பரவாயில்லே. ரேஞ்சு எவ்வளவு இருக்கும். அதுவும் திசையிடப்பட்ட போலீஸ் வேன். உள்ளேயிருந்துகொண்டு துப்பாக்கி வைத்து சுட்டால் ரேஞ்சு எவ்வளவு இருக்கும். நான் பெத்துநாயக்கன் பேட்டைக்குப் போயிருந்தேன். (ஒரு உறுப்பினர்: பெத்துநாயக்கன்பாளையம்).

திரு. கே. டி. கே. தங்கமணி: நண்பர் அவர்கள் போலீஸ் லாரியைப் பார்க்கவேண்டும். போலீஸ் லாரியில் பல துவாரங்கள் உண்டு. அந்தத் துவாரங்களில் துப்பாக்கியை வைத்துத்தான் சுட்டிருக்கிறார்கள். அப்படி யிருக்கக்கூடிய போலீஸ் லாரியை நண்பர் அவர்கள் பார்க்கவேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: துவாரங்கள் இருப்பதாகவே எடுத்துக்கொள் வோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி: நான் தலையிடக கூடாது என்று நினைக் கிறேன். இருந்தாலும், லாரியில் உள்ளேயிருந்து சுட்டார்கள். அந்த லாரியைப் பார்த்தவர்களுக்குத் தெரியும். விஷயம் தெரியாமல் பேசுவது நல்லது அல்ல.

திரு. எம். ஏ. லத்தீப்: நம்முடைய பெரியவர் திரு. கே. டி. கே. அவர்கள் துவாரங்கள் இருக்கின்றன போலீஸ் லாரியில் என்று சொல்கிறார்கள். அந்த துவாரங்களில் துப்பாக்கியை நுழைத்து . . . . .

மாண்புமிகு போவைத் தலைவர்: நீங்கள் இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்துவிடவேண்டும்.

[1972 ஆகஸ்ட் 10

திரு. எம். ஏ. லத்தீப் : ஒரு முக்கியமான பாயிண்டு சொல்கிறேன். துவாரங்களில் வைத்து எவ்வளவு தூரம் துப்பாக்கியைத் திருப்ப முடியும்? லாரியில் இருந்து சுட்டார்கள் என்றால் என்ன அர்த்தம்? ஆயிரக்கணக்கான பேர்கள் ஒரு போலீஸ் லாரியைத் தாக்கினர்கள். தாக்கியவர்கள் விவசாயிகள் அல்ல. விவசாயிகள் என்ற பெயரை வைத்துக்கொண்டு அங்கே இருந்த நாசகாரிகள், சமூக விரோத சக்திகள் போலீஸ் லாரியைத் தாக்க முயற்சி செய்தார்கள். பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் தான் சொல்கிறேன். நிகழ்ச்சி நடைபெற்றதற்குப் பிறகு நான் நெல்லை மாவட்டத்தில் இருக்கிற முக்கியமான நகரங்களுக்கும் சென்றிருந்தேன். இராமநாதபுரத்திலுள்ள முக்கியமான நகரங்களுக்கும் சென்றிருந்தேன். துப்பாக்கிச் சூடு நடந்த இடங்களுக்குச் சென்றிருந்தேன். அதற்கு சாட்சி என்னோடு கூட காங்கிரஸ்காரர்களும் இருந்தார்கள். அமைச்சர் திரு. ப. உ. சண்முகமும் இருந்தார்கள். பலரும் இருந்தார்கள். அங்கே நேரடியாகக் கேட்டுவிட்டுத் தான் இங்கே பேசுகிறேன். பெத்துநாயக்கன்பேட்டையில் (ஒரு உறுப்பினர் : பொத்துநாயக்கன்பாளையம்) பொத்துநாயக்கன்பாளையத்தில் போலீஸ் லாரியைப் பலாத்காரமாகச் சமூக விரோத சக்திகள் தாக்கியிருக்கிறார்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : அங்கு இருந்தவர்கள் எல்லோரும் சமூக விரோதிகளா?

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, Sir, that is why I have been very careful, doubly careful in my remarks. I did not say that the lorry was attacked by the farmers. I had been very much careful in my expressions. I may be bad in my Tamil. But my imagination, my recollection is not bad. I said that when I had been to Peddanaikenpalayam, after getting careful evidence from the people, I was just.....

THIRU K. T. K. THANGAMANI : Mr. Speaker, Sir. This is not correct. When the action concerns the lives of people, here we are hearing to this speech where the hon. Member says he is speaking from imagination. That cannot be allowed.

THIRU A. SUBRAMANIAM : Mr. Speaker, I am afraid the imagination of the hon. Member, Thiru Latheef is running riot.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, he does not even know the name of the place correctly; how can he speak about the incidents there?

THIRU M. A. LATHEEF : You are not the authority to allow me, Mr. K. T. K. here. I take great objection to it. He should withdraw that. Who is he to allow me? He is not the person. You are the only authority in this House, Sir.

THIRU K. T. K. THANGAMANI : I would like to know from the Hon. Speaker whether he can speak from imagination when it concerns the lives of nine people, when people talk so glibly from imagination.

THIRU R. PONNAPPA NADAR : Sir, Mr. Latheef is an hon. Member who is well-versed and a lawyer member. He should not style the assembly as unlawful. There is no enquiry. If there is a judicial enquiry, there will be a verdict. We can know whether it was anti-social element or not. Therefore, now most of his arguments are not relevant.

THIRU M. A. LATHEEF : Mr. Speaker, I am glad that at least our hon. Leader of the Congress Party.....

THIRU K. KANDASWAMY : It was stated that certain references should not be made. But so long we had been hearing members making charges against the Government with all seriousness. If they had got the courage, why should they not face a judicial enquiry? After having given it in writing that they do not want a judicial enquiry by a High Court Judge, if they speak now about serious shouting, loss of lives and property on what basis do they speak, I want to know.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையினுடைய அலுவல்கள் இத்துடன் முடிவடைகின்றன. மீண்டும் திரு. லத்தீப் அவர்கள் தொடர்ந்து ஐந்து நிமிடங்கள் நாளை பேசலாம். பேரவை மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

7. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

192. Notification issued with R. Dis. No. 20609/72, Rural Development, dated the 21st April 1972, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920, relating to building regulations in the entire area of